Registered as a Newspaper in Sri Lanka No..  ஆண்டுச் சந்தா: 3-50  விலை சதம் 25

# ஐக்கியதீபம்

மலர்: 33  (புதிய தொடர்) வைகாசி, 1978  இதழ் 12

ஸ்ரீ ல. தே. கூ. சபையில்
( யாழ்ப்பாணம் )
விற்பனையாகின்றன

| | |
|---|---|
| காசுப்புத்தகம் ஐ. நா. சங். | 30-00 |
| அங்கத்தவர் பேரேடு | 19-50 |
| அங்கத்தவர் இடாப்பு | 2-60 |
| கடன் மனுப்பத்திரம் ஐ. நா. ச. | 10 |
| கடன் முறி ஐ. நா. ச. | 15 |
| கேள்விப் பத்திரம் | 10 |
| மத்தியஸ்த மனு | 10 |


## கூட்டுறவு இயக்கம் மக்கள் கைகளில் ஒப்படைக்கப்படும்

### அமைச்சர் வாக்குறுதி

**கூட்டுறவு இயக்கம் குறித்து நாம் செய்யவிருக்கும் தகவுரைகள் உண்மையான கூட்டுறவுக் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்தவையாய் இருக்கும். கூட்டுறவு இயக்கம் மீண்டும் மக்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டு அது மீண்டும் பழம் பெருமையுடன் விளங்குவதற்கு நாம் வழி வகுப்போம். இதில் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்ற போதிலும் எமது அறிக்கையை ஆறுமாத காலத்திற்குள் வெளியிட நாம் உத்தேசித்துள்ளோம்.**

மேற்கண்டவாறு நீதியமைச்சரும் கூட்டுறவு விசாரணைக்குழுவின் தலைவருமான திரு. K. W. தேவநாயகம் கூட்டுறவு விசாரணைக்குழு தனது அமர்வை யாழ்ப்பாணத்தில் முடித்துக் கொண்டபோது பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விசாரணைக்குழு மே 25ந் திகதி தொடக்கம் நான்கு நாட்களாக வீரசிங்கம் மண்டபத்தில் பகிரங்க விசாரணையை நடாத்தியது.

விசாரணையின் முதல் நாள் அமைச்சர் திரு. தேவநாயகம் சமுகமளிக்க முடியாது போனமையால் திரு. பி. ஈ. வீரமன் தற்காலிகமாகத் தலைமை வகித்தார். விசாரணைக் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் வருமாறு: ஜனாப் M L M அபுசாலி பா உ., திரு. K. அபேவிக்ரம, பா. உ., திரு. M.G. பிரேமச்சந்திரா, பா. உ. திரு R H. டி.மெல், திரு. P. E. பெர்னாண்டோ (செயலாளர்)


திரு. தேவநாயகம் விசாரணை முடிவில் மேலும் பேசியதாவது: யாழ்ப்பாணப் பகுதியில் கூட்டுறவு இயக்கம் நல்ல வளர்ச்சியுற்றிருப்பதால் கூட்டுறவு இயக்கத்தின் புனரமைப்பு குறித்து அறிஞர்களிடமிருந்து நல்ல ஆலோசனைகளை இப்பகுதியிலே பெறலாம் என்பதனாலேதான் விசாரணையின் முதல் அமர்விற்கு யாழ்ப்பாணத்தைத் தேர்ந்தெடுத்தோம். எமது முன்னிலையில் சாட்சியமளித்தவர்கள் பயன்மிக்க ஆலோசனைகளை வழங்கியுள்ளனர். கூட்டுறவு இயக்கத்திற்குச் செம்மையான இடத்தையளிப்பது இலகுவான காரியமல்ல. கடந்த ஆட்சிக்காலத்திலே கூட்டுறவுக் கொள்கைகள் காற்றிலே பறக்க விடப்பட்டன.

சங்கங்களில் உணவு விநியோகம் செய்வதிலே ஏற்படும் குறைபாடுகள் அரசாங்கத்தின் மீது சுமத்தப்படுகின்றன. அரசாங்கம் அதனை மக்கள் இயக்கமாக அமைக்கத் திடங்கொண்டுள்ளது.

மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூட்டுறவு இயக்கம் சிறந்த வழியாகும். அதன் அமைப்பு முழுவதையும் மாற்றியமைக்க நாம் தீர்மானித்துள்ளோம்.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டக் குழுத்தலைவர் திரு சு. கந்தையா நன்றி தெரிவித்துப் பேசுகையில் இவ் விசாரணைக்குழு இடைக்கால அறிக்கையொன்றினை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மறுசீரமைப்பை இயன்றளவில் விரைவாக இக்குழு செய்யுமானால் அரசாங்கத்திற்கு நற்பெயரைப் பெற்றுக் கொடுப்பதாக அமையும். கடந்தகாலங்களில் சங்கங்களில் ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வதற்கு விரைவில் முயற்சிகள் எடுக்கப்படுமானால் கூட்டுறவாளர்களின் ஆசிகள் கிடைக்கும். மறுசீரமைப்பு பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட்டு முடிந்ததும் நெறியாளர் தேர்தலை நடாத்துவது சிறப்பாகும் என்று அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்:

தொடர்ந்து திரு. கந்தையா பேசுகையில் நான்கு நாட்கள் இங்கு தங்கியிருந்து விசாரணையை நடாத்திய குழுவிற்கு கூட்டுறவாளர்களதும் ஆணையாளரினதும் சார்பில் நன்றி தெரிவிப்பதாகவும் கூட்டுறவு இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றியமைக்கும் பொருட்டு ஆக்கபூர்வமானவற்றைச் செய்வதற்கு அந்த நான்கு நாட்களும் பயனுள்ளவையாக இருக்கும் என்று நான் நம்புவதாகவும் தெரிவித்தார்.



வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவு மறுசீரமைப்புக்குழு விசாரணை நடாத்துவதையும், கூட்டுறவாளர் சாட்சியமளிப்பதையும் படத்தில் காணலாம்

### கூட்டுறவாளருக்கு மக்கள் வங்கியில் இடமில்லை

5-5-1978 ல் வெளியிடப்பட்ட மக்கள் வங்கியின் விசேட விதிமுறைகள் பற்றிய நகல் மசோதாவிற்கு அமைய இனிமேல் கூட்டுறவாளர்கள் மக்கள் வங்கியில் பிரதிநிதிகளாயிருக்க முடியாது.

இவ்வங்கிப் பணியாளர் 8 பேரும் அமைச்சரினாலே நியமனம் செய்யப்படுவார்கள்.

மக்கள் வங்கியின் 50 வீதமும் கூட்டுறவு இயக்கத்திற்குச் சொந்தமாக உள்ளதோடு, கூட்டுறவு மாகாண வங்கிகள் சுவீகரிக்கப்பட்டதன் விளைவாகவே மக்கள் வங்கி உருவாக்கப்பட்டது, ஆதலால் இத்தகைய ஒரு நடவடிக்கை கூட்டுறவு இயக்கத்தை நோக்கி வீசப்பட்ட சவால் என்று தேசிய கூட்டுறவுச் சபை கருதுகின்றது.

# கிராமிய பொருளாதாரத்தில் வங்கிகள் ஏற்படுத்திய தாக்கம்

திருமதி யோ. செல்வரத்தினம்
விரிவுரையாளர்
கூட்டுறவுக் கல்லூரி பொல்கொல

(முற்றொடர்)

**அடைவு பிடித்தல்**

அடைவு பிடித்தல் கூட்டுறவுக் கிராமிய வங்கியின் கடமைகளில் ஒன்றாகும். மக்கள் வங்கியின் முகவர் என்ற வகையில் கிராமிய வங்கி நகை அடைவு பிடித்தல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றது. ஆரம்பத்தில் பவுண்ஒன்றிற்கு 100 ரூபாவினை நகை அடைவுக் கடனாக வழங்கி வந்த கிராமிய வங்கி பவுணினது விலை அதிகரிப்பைத் தொடர்ந்து பவுண் ஒன்றிற்கு ரூபா 280/- கடனாக வழங்கி வருகிறது. டாக்டர் என். எம். பெரேராவின் ''இலங்கையின் செழிப்பும் போக்கும்'' என்ற நூலில் குறிப்பிடப்பட்டது போல கூட்டுறவுக் கிராமிய வங்கி நகை அடைவு பிடித்தல் தொழிலில் ஈடுபட்டு வருவதன் மூலம் விவசாயிகட்கு வேண்டிய போது கடன்களை வழங்குவதை விட விவசாயிகளை கிராமிய முதலாளியின் பிடியிலிருந்து பாதுகாக்கவும் உதவி வருகிறது எனலாம். விவசாயி தனக்குப் பணம் வேண்டிய நேரத்தில் குறைந்த வட்டியுடன் தனது நகைகளை ஈடாகக் கொடுத்து பணத்தைப் பெறுவதுடன் அறுவடை முடிந்ததும் தனது வெளியீடுகளை விற்றுப் பெறும் பணத்தின் மூலம் தமது உடைமைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இச் சேவை விசேடமாக யாழ்ப்பாணப் பகுதியில் குறிப்பிடத்தக்க சேவை ஆற்றி வருகிறது.

அடைவுக் கடன் விபரம்.

| ஆண்டு | கடன் தொகை | கடன் பெறுமதி |
|---|---|---|
| 1965 | — | ரூபா .3மில்லியன் |
| 1970 | 18.092 | ரூபா 2 0மில்லியன் |
| 1975 | 298,583 | ரூபா 49 9மில்லியன் |
| 1977 | — | ரூபா 55 8மில்லியன் |

மேலே குறிப்பிட்ட புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் பொழுது கிராமிய வங்கி ஒரு வளர்ச்சி நிலையினையே காட்டுகின்றது. 1964ம் ஆண்டு கிராமிய வங்கிகள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அதன் வளர்ச்சி 1971 ம்ஆண்டு வரை பின்தங்கியே காணப்பட்டது. இக்காலப்பகுதியில் நாட்டின் பல பகுதிகளிலும் காணப்பட்ட 5884 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கட்கு 1971 ம் ஆண்டு முடிவில் 90 கிராமிய வங்கிகள் மட்டுமே ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. ஆனால் 1971ம் ஆண்டு கூட்டுறவுச் சங்க புனருத்தாரண சட்டத்தின் பின்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 276 பெரிய ஆரம்ப சங்கங்களாக மாற்றப்பட்டன. ஒவ்வொரு சங்கமும் குறைந்த பட்சம் ஒரு கிராமிய வங்கியையாவது வைத்திருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இதன் காரணமாக 1977ம் ஆண்டின் முடிவில் விசேஷ கிளைகள் உட்பட 544 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் அமைக்கப்பட்டன. எனவே அண்மையான கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் வளர்ச்சி 1971ம் ஆண்டின் பின்பே ஏற்பட்டது எனக்கூறலாம். இவ்வாறு நோக்கும்போது கூட்டுறவு கிராமிய வங்கிகள். இன்றும் அதன் ஆரம்ப பருவத்திலேயே தான் இருக்கிறதெனக் கூறலாம். இவ்வாறு நோக்கும் போது இன்று கூட்டுறவுக் கிராமிய வங்கிகளை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் பலவுள்ளன.

கிராமிய வங்கியினை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும் பின்வருமாறு:

(அ) கூட்டுறவு கிராமிய வங்கிகள் வங்கி என அழைக்கப்பட்டு ஒரு வங்கியின் தொழிற்பாடுகளைச் செய்து வந்தாலும், இன்னும் ஒரு முழுமையான வங்கியாக அமையவில்லை. மக்கள் வங்கியின் நிதி உதவியுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) கூட்டுறவு கிராமிய வங்கி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அமைப்பில் இயங்குகிறது. இன்றைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கம் அங்கத்தவர்களின் நுகர்ச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்தலாகும். அத்துடன் உணவுப் பொருட்கள் விநியோகத்தில் அரசாங்கத்தின் முகவர்களாகவும் கடமையாற்றி வருவதினால் கூட்டுறவு கிராமிய வங்கித் தொழிற்பாடு 2ம் தர நோக்கமாகக் கருதப்பட்டு வருகின்றன. இது இதன் வளர்ச்சிக்கு தடையாக உள்ளது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது நுகர்ச்சி நோக்கத்தைப் போலவே இவற்றிலும் கூடிய கவனம் எடுத்து அதன் வளர்ச்சிக்கும் சேவைக்கும் ஊக்கமளிக்கப்படல் வேண்டும்.

(இ) கிராமிய வங்கிகளில் கடமையாற்றும் ஊழியர்கள் பொறுப்பும்,அதை நிறைவேற்கும் அதிகாரமும் போதியளவு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அமைப்பின் கீழ் இயங்கினாலும் பொறுப்பும் சுதந்திரமாக நிறைவேற்கும் அதிகாரமும் வழங்கப்படல் வேண்டும்.

(ஈ) கிராமிய வங்கி ஊழியர்கட்கு வங்கி பற்றியதும் வாடிக்கையாளர் பற்றியதும் போதிய அறிவும் பயிற்சியும் இல்லாமை ஒரு குறையாகக் காணப்படுகின்றது. கிராமிய வங்கிகள் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் ஒரு கிளையாகவே கருதப்பட்டு வருவதனாலும் ஊழியர்கள் இயக்குநர் சபைத் தீர்மானங்கட்கேற்ப அடிக்கடி மாற்றப்படுவதினாலும் பயிற்சியும் அனுபவமும் பெற்றவர்களின் சேவை கூட இழக்கப்படுகின்றன. கிராமிய வங்கி பற்றிய அறிவு குறைந்த கிராமிய வாசிகட்கு அதைப்பற்றிய விளக்கம் கொடுத்தல் அவசியமாகும். வங்கி எல்லைக்குள் உள்ள ஏனைய வங்கிகளுடன் ஒப்பிட்டு இதன் சேவையை எடுத்துரைத்தல், சேமிப்பாளருக்கு கிடைக்கும் சலுகைகளான கூடிய வட்டி வீதம், கூடிய வேலை நேரம், சனிக்கிழமைகளிலும், நினைத்த நேரத்திலும் பணத்தினை திருப்பிப் பெறும் வசதி போன்றவற்றை வாடிக்கையாளருக்கு எடுத்துரைத்து சேமிப்பினைக் கூட்டி கிராமிய பொருளாதாரத்தினை மேம்படுத்த வங்கி ஊழியர்கள் ஆவன செய்தல் வேண்டும். இவற்றிற்கேற்ற முறையில் இவர்கள் பயிற்றப்படுதல் அவசியமாகும்.

இத்தகைய குறைபாடுகளை நீக்கி கிராமிய வங்கி மக்களுக்குச் சேவை செய்ய முன்வருமானால் உண்மையில் கிராமிய அபிவிருத்திக்கு வேண்டிய தொண்டாற்றமுடியும். கிராமிய வங்கிகள் சிராமிய பொருளாதாரத்தில் ஒரு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பது திண்ணம்.

(முற்றும்)

# 19ம் நூற்றாண்டுத் தமிழிலக்கியத்தின் முக்கிய போக்குகள்

மனோன்மணி சண்முகதாஸ்

(முற்றொடர்)

19ம் நூற்றாண்டில் புதிய இலக்கிய வடிவங்கள் தோன்றியதற்கு அதன் போக்குத்தான் காரணமாக அமைந்தது. இங்கு இச் சந்தர்ப்பத்தில் கனகி புராணம் என்னும் நூலை எழுதிய ஈழத்துப் புலவர் சுப்பையனார் பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமுடைத்தாகும். கனகி புராணம் என்னும் நூலை, கிடைத்த செய்யுட்களைக் கொண்டு வட்டுக்கோட்டை இராமலிங்கம் பிள்ளையவர்கள் பதிப்பித்து வெளியிட்டார்கள். அவர் தமது முகவுரையிற் கூறுவது போலக் கனகி புராணம் பதினெண் புராணங்களில் ஒன்றாகவோ அல்லது வடநூல் மொழி பெயர்ப்பாகவோ அமையவில்லை. புலவர் சுப்பையனாரால் புதிதாய் இயற்றப்பட்டதாகும்.

பழைய புராணமென்ற இலக்கிய வடிவத்தின் போக்கினை முற்றாய் மாற்றியமைத்தவராகக் கனகி புராண ஆசிரியர் 19ம் நூற்றாண்டில் பெருஞ் சிறப்புப் பெறுகின்றார். புராணநெறியினைப் புதுவழியிலே இட்டுச் சென்ற யாழ்ப்பாணத்தவர் மூவராவர். அவர்கள் அச்சுவேலி நீ. காசிநாதப் புலவர்; கோப்பாய் வே. இராமலிங்கம்; வண்ணார் பண்ணைச் சுப்பையர் என்பவராவர். காசிநாதப் புலவர் பாடியது தால புராணமாகும். அதனைப் பற்றிய விரிவான தகவலை அறிந்துகொள்ள முடியவில்லை. வே. இராமலிங்கம்பிள்ளையால் இயற்றப்பட்ட கோட்டுப் புராணம் பற்றியும் தகவல்கள் போதுமான அளவிற்கில்லை. தாலபுராணமும், கோட்டுப் புராணமும் அழிந்து விட்ட போதும் கனகி புராணத்தின் சில செய்யுட்கள் இன்றுள்ளன. அவையே வட்டுக்கோட்டை இராமலிங்கம் பதிப்பித்தவையாகும். பாடலெண்ணிக்கை பற்றிப் பல்வேறு அபிப்பிராயங்களிருந்த போதும் எஞ்சியுள்ள பாடல்கள் மூலம் அதன் சிறப்பினை நோக்கும் போது அப்பாடல்கள் 19ம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் ஒரு முக்கிய போக்கினை அமைத்து விட்டவையாக விளங்குகின்றன.

கனகி புராணத்தின் பாட்டுடைத் தலைவி கற்பனைப் பிறவியாக இல்லாமல் வண்ணார்பண்ணைச் சிவன் கோவில் தாசிகளில் ஒருத்தி எனப் பாவலர் சரித்திர தீபம் கூறுகிறது. சுப்பையனார் தமது காலத்தில் வாழ்ந்த பெண்ணையே கதாநாயகியாகக்கொண்டு புராணத்தினை இயற்றியது ஏனைய முன்னைய காலப் புராணங்களின் போக்கிலிருந்து வேறுபட்டு நிற்கிறது. இன்னும் ''தமிழிலக்கியத்தில் அங்கதம் குறிப்பிடத்தக்கதொரு இலக்கியத் துறையாக வளர்ச்சி அடைந்திருந்தது என்று கூறுதல் கடினமாகும்'' என்ற கலாநிதி பூலோகசிங்கத்தின் கருத்து ஏனைய அங்கத இலக்கியங்களுக்கு அது காலத்தால் முந்தியதென்பதை நிறுவி நிற்பதாலும் கனகி புராணம் குறிப்பிடத்தக்க முக்கியதொரு போக்கினை தமிழ் இலக்கியத்தில் ஏற்படுத்தியமை பெறப்படுகிறது. கனகி புராணமும் அக்காலத்தின் தேவைக்கேற்றவாறு சமூகத்தின் ஊழல்களை எடுத்துக்காட்டி அவற்றைத் திருத்துகின்ற நோக்கத்தைக் கொண்டதாக இருந்தமை இது ஈழத்தல் 19ம் நூற்றாண்டின் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு திருப்புமையமாக அமைவது மட்டுமன்றி தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே முக்கிய போக்கொன்றினை ஏற்படுத்திய இலக்கிய வடிவமாகவும் அமைந்தது.

இவ்விடத்து ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் சமகாலத்தில் இலக்கிய வடிவ அமைப்பில் வேறுபாடு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சுப்பையனாரது சமகாலத்தில் வாழ்ந்தவரும் 19-ம் நூற்றாண்டிலே தமிழுலகிலே புகழ் பெற்று விளங்கியவருமான மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் பதினாறு தலபுராணங்களையும், பல அந்தாதிகளையும் பிள்ளைத் தமிழ்களையும், பிரபந்தங்களையும்இயற்றிச் சிறப்பு பெற்று வந்தார். ஆனால் இருவரது சிறப்புக்கும் வேறுபாடு உண்டு. பழைய புராண மரபு தவறாமல் மீனாட்சிசுந்தரனார் இயற்றிய புராணங்கள் அக்கால இலக்கிய வடிவத்தில் எந்தவிதமான புதுமையையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் ஈழத்துப் புலவரான கனகி புராண ஆசிரியர் சுப்பையனார் காலத்துக்கியைந்த வடிவமாக புராண இலக்கிய வடிவத்தை மாற்றியமைத்தது குறிப்பிடத்தக்கதொரு தாக்கத்தை இலக்கிய வரலாற்றிலே ஏற்படுத்தி விட்டது பழைய மரபுகளைப் புதுமைக் கருத்துக்

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

# புதிய அனைத்துலக பொருளாதார அமைப்பு-- அதன் சமூக நோக்கங்கள்

பிரான்சிஸ் பிளன்சா

அனைத்துலக தொழில் நிறுவனத்தின் பிரதம நெறியாளர்

(முற்றொடர்)

அபிவிருத்திபற்றிய புதிய அணுகுமுறைக்குப் பின்வருவனவும் தேவைப்படுகின்றன: வள ஆதாரங்களின் உண்மையான பெறுமதியைப் பிரதிபலிக்கக் கூடியவகையில் விலைகள், விலை அமைப்பு திருத்தியமைக்கப்படல்; அத்துடன் அடிப்படைச் சேவைகளை வழங்குவதற்கு வேண்டிய நிதியை, படியமைப்பிலான வருமான வரிமுறைமூலம் பெறுதல்; கிராமப்புறங்களில் பொதுவேலைத் திட்டங்களில் கூடிய ஆட்களை வேலைக்கமர்த்தல்.

வியாபாரத்தைப் பெருக்குவதை ஒரு கருவியாகக் கையாண்டு ஏற்றுமதி வாய்ப்புக்களை உருவாக்குவதும் அன்னிய உதவியில் நிரந்தரமாகவோ தேவைக்கதிகமாகவோ தங்கியிராது இறக்குமதித் தேவைகளைச் சமாளிப்பதுவுமே அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உற்பத்தி அமைந்தால் தேசியப் பொருளாதாரம் முன்பைவிட ஒன்றிணைக்கப்படுவதற்கும் கூடிய சுய ஆதாரத்திற்கும் வழி பிறக்கும். சுய ஆதாரத்தை இந்த அணுகுமுறை வற்புறுத்துகின்றபோதிலும் சர்வதேசச் சூழ்நிலை சாதகமாக அமைந்து அனைத்துலக உதவிகள் கிடைக்கப்பெறுமாயின் ஏழைகளின் மிகக்குறைந்த அடிப்படைத் தேவைகள் கூடிய விரைவில் பூர்த்தி செய்யப்படுவது சாத்தியமாகலாம்.

முன்பு குறிப்பிட்டது போல அபிவிருத்தியை ஆதரிக்கவல்ல மிகமுக்கிய

அடிப்படைத் தேவைகள் அணுகுமுறையின் குறிக்கோளாகும். இந்த அணுகுமுறையில் தேசிய ஈடுபாட்டினை உறுதிப்படுத்தும் பொருட்டு அபிவிருத்தியில் மக்கள் தொடர்ச்சியாசுப் பங்குபற்றுவதற்கு தொழிற்சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள்போன்ற நிறுவனங்கள் அமைக்கப்படுவது இன்றியமையாதது.

மேலே குறிக்கப்பட்டுள்ள உத்திமுறையைக் கடைப்பிடிப்பதென்றால் பெரும்பாலான வளர்ச்சியுற்றுவரும் நாடுகளிலே அத்தியாவசிய உணவுப்பொருட்களினதும், பாவனைப்பொருட்களினதும் உள்ளூர் உற்பத்தி கணிசமாக அதிகரிக்கப்பட வேண்டும்.

சர்வதேச சீர்திருத்தங்கள் குறித்து தீவிர பேரப் பேச்சுக்கள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. இத்தகைய சீர்திருத்தங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்: மூலப் பொருட்களின் ஏற்றுமதி மூலம் வளர்ச்சியுற்றுவரும் நாடுகள் பெறும் வருமானம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்: வளர்ச்சியுற்று வரும் நாடுகளின் கைத்தொழில் உற்பத்தி கைத்தொழில்மய நாடுகளின் சந்தைகளை கூடிய அளவில் எட்ட வழி செய்யப்படல் வேண்டும்: மேலதிக வள ஆதாரங்களை வளர்ச்சியுற்று வரும் நாடுகளுக்கு மாற்றம் செய்தல்; சர்வதேசநாணய முறையைச் சீர்திருத்துகல் பொருத்தமான தொழில் நுட்பமுறைகளை வளர்ச்சியுறும் நாடுகளுக்கு மாற்றம் செய்வதற்கும் தக்கமுறையில் அவற்றினை விருத்திசெய்வதற்கும் சீரான ஒழுங்கு முறைகளை வகுத்தல்; வளர்ச்சியுற்று வரும் நாடுகளின் வியாபாரத்தைப் பாதிக்கும் வணிக கட்டுப்பாடுகளைத் தளர்த்தல்; உலக உணவுக்கொள்கைகளைச் சீராக்குதல்; வளர்ச்சியுற்று வரும் நாடுகளுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பை விருத்தி செய்தல்.

மேற்குறிப்பிட்ட சீர்திருத்தங்களின் எல்லை வீச்சும், தன்மையும் நடைமுறை விபரங்களும் இன்னும் பேரப் பேச்சளவிலேயே இருக்கின்றன. அதற்குப் பின்னர் அவை உலகளாவிய ஒப்புதலைப் பெற வேண்டும். ஆனால், சர்வதேச மட்டத்தில் இம்மாற்றங்கள் ஏற்படுத்தப்படாவிடில் அடிப்படைத்தேவைகள் அணுகுமுறையும் அதைத் தழுவிய செயற்திட்டங்களும் வெற்றியீட்டாதென்பதை மீண்டும் வற்புறுத்த விரும்புகின்றேன்.

மேற்குறிப்பிட்ட சீர்திருத்தங்களில் பல மறுசீரமைக்கப்பட்ட உலகப்பொருளாதார அமைப்பினைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. இவ்வுத்தேச அமைப்பில் நிகழும் வியாபார ஓட்டம், உலக உற்பத்தியும் வேலைவாய்ப்பும் வருமானமும் முன்பைவிட சமமாகப் பங்கிடப்படுவதைப் பிரதிபலிக்கும். இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. ஏனெனில்

(1) அடிப்படைத் தேவைத் திட்டங்களின் வெற்றியோடு இது பெரிதும் தொடர்புள்ளது.

(2) வளர்ச்சியுற்ற நாடுகளிலுஞ்சரி, வளர்முக நாடுகளிலுஞ்சரி வேலைவாய்ப்பு அமைப்புக்களை இது பெரிதும் பாதிக்கும்.

குறுகிய கால நோக்கிலுஞ்சரி அடிப்படைத் தேவை இலக்குகளை எய்துவதற்கு உலகப்பொருளாதாரம் புனரமைப்புச் செய்யப்படுதல் அவசியம்.

உலக வருமானமும், உற்பத்தியும் சமநிலைப்படுத்தப்படுவதிலேயே இந்த இலக்குகளை அடைவது தங்கியிருக்கின்றது. விரிவடைந்து வரும் உலகப் பொருளாதாரத்தில் பண்டப் பரிமாற்றத்திற்கும், சிறப்பு உற்பத்தி முறைக்கும் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுவதிலேயே இச்சமநிலைப்பாடு தங்கியிருக்கின்றது.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# மாறிவரும் காலகட்டங்களில் கூட்டுறவு தன்னுதவி பற்றி சில சிந்தனைகள்

W. P. வொட்கின்ஸ்

எந்தச் சமூக அமைப்பிலும் — அதன் தொழில்நுட்ப அரசியல் வளர்ச்சிக் கட்டம் எவ்வாறாக இருப்பினும் —மனித நலன் மூன்று காரணிகளின் இணைப்பால் உருவாக்கப்படுகின்றது என்ற கருதுகோலில் இருந்துதான் கூட்டுறவு தன்னுதவி (200 ஆண்டுகளாக பரிணும வளர்ச்சி பெற்றது) பற்றிய இச்சிந்தனைகள் தொடங்குகின்றன. இம்மூன்று காரணிகளாவன: தன்னுதவி — தனியாள் தனக்கும் தனது குடும்பத்திற்கும் செய்பவை; ஒருவர்க்கொருவர் உதவி — பொது நோக்கங்களை எய்தும்பொருட்டு மக்கள் ஒன்று கூடிச் செய்பவை; அரச உதவி-பொதுவாகச் சமுதாயத்திற்கும் குறிப்பாக வக்கற்றவர்களுக்கும் அரசாங்கம் செய்பவை. இம்மூன்று செயற்பாங்குகளும் அடிப்படையில் ஒன்றையொன்று தழுவி நிறைவுபடுத்துகின்றன —சூழ்நிலைக்கேற்ப இம்மூன்றின் இணைச்செயற்பாடு மாறுகின்றது. நன்கு திட்டமிடப்பட்ட சமுதாய அமைப்பில் இம்மூன்று காரணிகளும் நன்கு இயைபுபடுத்தப்படும் பொழுது மனித நலன் உச்ச நிலையை எய்துகின்றது.

கூட்டுறவுத் தன்னுதவி சாராம்சத்தில் ஒருவர்க்கொருவர் அல்லது கூட்டு உதவியாகும். அது தனியொருவர்பாற்பட்டதல்ல. கடந்த நூற்றுண்டில் வாழ்ந்த பிரிட்டிஷ் கிறீத்தவ சமூகவுடைமைவாதியொருவர் கூறியதுபோன்று: ''கூட்டுறவு என்பது தன்னுதவியே அன்றி, தன்னல உதவி அல்ல'' கடந்த நூற்றுண்டில் வாழ்ந்த ரஷ்ய மெய்யியல் அறிஞர் P. A. குரோபேர்ட்கின் ஒருவர்க்கொருவர் உதவும் பண்பு மனித குலத்தின் மிக ஆழ்ந்த பழைமை வாய்ந்த இயல்பூக்கம் என்பதனை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். இந்த இயல்பூக்கத்தின் நவீன வடிவங்களில் கூட்டுறவு இயக்கம் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்பதனை அவர் எடுத்துக் காட்டியுள்ளார். கூட்டுறவுக் கொள்கைகளை வரையறுப்பதற்கு அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தினுல் நிறுவப்பட்ட குழு 1966ல் வெளியிட்ட தனது அறிக்கையில் பின்வருமாறு கூறிற்று: ''தனிப்பட்ட சங்க உறுப்பினர்களின் நலன்களைப் பேணுவதற்கு மேலாக மனித குலத்தின் வளர்ச்சியையும் நலனையும் பேணுவதே கூட்டுறவு இயககத்தின் உன்னதகுறிக்கோளாகும்.''

## முதற் கட்டம்

ஒருவர்க்கொருவர் உதவும் முகமாக ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன்னர் கூட்டுறவு இயக்கம் பிரித்தானியாவில் மாபெரும் கைத்தொழில் புரட்சிக் காலத்தில் தோன்றிற்று. இந்தக் கைத்தொழில் புரட்சி 19ம் நூற்றுண்டிலே பிரித்தானியாவில் தொடங்கி ஐரோப்பாவிற்கும் வட அமெரிக்காவிற்கும் பரவிற்று. இப்பொழுது இப்புரட்சி மூன்றும் உலகில் தாண்டவமாடுகின்றது. ஆரம்ப கட்டத்தில் கைத்தொழில் புரட்சி முதலாளித்துவ தலைமையில் நடைபெற்றது. மக்கள் பரவலாகக் கைத்தொழில் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் பெயர்ந்து சென்று குடியேறலாயினர். இவர்கள் வாழ்ந்த வீடமைப்பு நிலைமைகள் மிகவும் சீர்கேடுற்று இருந்தன. வறுமையின் கோரதாண்டவத்தை எந்த அரசாங்கத்தாலும் தடுக்க முடியாதிருந்தது. ஏனெனில் கூட்டங்கள் மூலமோ நிருவாக நடவடிக்கைகள் மூலமோ சொத்துடைமையற்ற வர்க்கங்களின் பெருக்கத்தைத் தடுக்க முடியவில்லை. வறுமையை நீக்குவதற்கு தர்மத்தால் முடியவில்லை. இதன் விளைவாக ஏழ்மையில் உழன்ற தொழிலாளர்கள் பல்வேறு வடிவங்களில் ஒருவர்க்கொருவர் உதவி புரியும் திட்டங்களை நாடினர்கள் — பரஸ்பர நலன்புரிச் சங்கங்கள் வாழ்க்கைச் செலவுகளைக் குறைப்பதற்கான கூட்டுமுயற்சிகள், தொழிற்சங்கங்கள் (இவை சட்டத்தால் தடை செய்யப்பட்டபோதிலும்) இவர்களது முயற்சிகளுக்கு நல்லெண்ணம் படைத்த கொடை வள்ளல்களும் புதிய கைத்தொழில் அமைப்பை விமர்சனக் கண்கொண்டு நோக்கியவர்களும் உற்சாகமளித்தனர். இத்தகையவர்கள் வறுமையைத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான வழிகளை நாடி நின்றனர்.

(வளரும்)

சிறந்த தரமுள்ள பொருட்களைப்பெற
கூட்டுறவின் ஆக்கப்பணிக்கு உதவுங்கள்.
குறைந்த விலையில் நிறைந்த பயன்தரும்

பண்கோப் சேட்வகைகள்
பண்கோப் காற்சட்டைகள்
பண்கோப் நைலெக்ஸ் சேலைகள்,
சூட்டிங் வகைகள்.
நல்லெண்ணெய்
நீல சவர்க்காரம்
கைத்தறிப் புடவைகள்
பாண், பிஸ்கட், கேக் வகைகள்

ஆகியவற்றை

பண்டத்தரிப்புப் பரிஷ்
ப.நோ.கூ.சங்கத்தில்
பெற்றுக்கொள்ளுங்கள்

தொலைபேசி இல. பண்டத்தமிப்பு 808
பண்டத்தரிப்பு 36

# "கூட்டுறவுச் சங்கங்கள் அ

## யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டுறவு

கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுடைய சொத்துக்கள். அவை அரசாங்கத்தின் முகவரல்ல. இத்தகைய நிலை இலங்கையில் மட்டுமே இருக்கிறது. வேறு எந்த நாட்டிலும் இல்லை. அரசாங்கத்தின் முகவர் என்ற நிலையை ஏற்றுக்கொண்டால் அதன் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படவேண்டும்.

இவ்வாறு கூட்டுறவு மறுசீரமைப்பு விசாரணைக் குழு உறுப்பினராகிய திரு. P. E. வீரமன் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற முதல் நாள் விசாரணையின் போது பிரதேச கூட்டுறவாளர் சபையின் சார்பில் தலைவர் திரு. சு. கந்தையா சாட்சியமளிக்கையில் கருத்துத் தெரிவித்தார்.

திரு. கந்தையா தனது சாட்சியத்தில் கூட்டுறவு முன்பு நல்ல வளர்ச்சியடைந்திருந்தது. இந்த வளர்ச்சிக்குப் பின்பு தடை ஏற்பட்டுவிட்டது. எனவே, கூட்டுறவு இயக்கத்தில் அனுபவமும் சர்வதேசப் புகழும் வாய்ந்த அறிஞர்கள் இவ்விசாரணைக்குழுவில் அங்கம் வகிப்பதால் கூட்டுறவு இயக்கத்தை மறுசீரமைப்பதற்கும், அதனை மக்கள் இயக்கமாக திகழச் செய்வதற்கும் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இக்குழு தகவுரை செய்யும் என்று நம்புவதாகக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை, ப. நோ. கூ. சங்கங்கள் ஆகியவற்றின் சார்பாக முன்பு தான் சமர்ப்பித்த மகஜரில் பாவனையாளர்களுக்கு ப. நோ. கூ. சங்கம் மூலம் விளைபொருள்களைச் சந்தைப்படுத்துவதன் அவசியத்தை வற்புறுத்தியிருந்ததாகச் சுட்டிக்காட்டினார்.

### சந்தைப் படுத்தல் சம்மேளனத்தால் பயனில்லை

அவர் மேலும் சாட்சியமளிக்கையில் கூட்டுறவு சந்தைப்படுத்தும் சம்மேளனத்தால் எந்தவித பயனுமில்லை என்பதை வலியுறுத்தினர். ஏனெனில் கூட்டுறவு சந்தைப்படுத்தும் சம்மேளனம் கூட்டுறவாளர்களுக்கு விளைபொருள்களைச் சந்தைப்படுத்துவதற்குப் பதிலாக தனிப்பட்ட வியாபாரிகளுக்கு அவற்றை விற்பனை செய்து உதவி வருவதாக அவர் சுட்டிக்காட்டினர். தனிப்பட்டவர்களிடமிருந்து குறிப்பாகச் செத்தல் மிளகாய் இச்சம்மேளனத்தால் கொள்வனவு செய்யப்பட்டதால் மக்களது பாவனைக்கு உதவாத பெருவாரியான செத்தல் மிளகாய் விற்கமுடியாது தேங்கிக் கிடக்கின்றது. ஆதலால் சந்தைப்படுத்தும் சம்மேளனத்தின் மாவட்ட கிளைகள் அவ்வப்பகுதி விளைபொருள் கூட்டுறவாளர் சங்கத்துடன் இணைக்கப்பட வேண்டும் எனத் தகவுரை செய்கிறோம் என்று திரு. கந்தையா கருத்துத் தெரிவித்தார்.

### நெறியாளர்களைத் தெரிவதற்கு சங்கங்களுக்கு அதிகாரம்

அவர் மேலும் பேசியதாவது: யாழ் மாவட்டத்தில் பல நெசவுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்த போதிலும் இவற்றை இயக்குவதற்கு 5 நெறியாளர்களைக் கொண்ட ஒரேயொரு நெசவுக் கூட்டுறவுச் சங்கமே இருக்கின்றது. இச்சங்கம் மறுசீரமைக்கப்பட வேண்டும். ப. நோ. கூ. சங்கங்களின்தும், தேசிய கூட்டுறவுச் சபையினதும் உபவிதிகள் திருத்தப்பட வேண்டும். இத்திருத்தங்கள் மூலம் தமது நெறியாளர்களைத் தெரிவு செய்வதற்குச் சங்கங்களுக்குக் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அரசாங்கம் நியமனங்கள் செய்யும் வழக்கத்தைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

திரு. வீரமன் : ஆரம்பத்தில் கிராமங்களில் 5 ஆயிரம் ப. நோ. கூ. சங்கங்கள் இருந்தன. அதாவது, ஒரு சங்க எல்லைப் பரப்பில் 3 கிராமங்கள் அடங்கும். ப. நோ. கூ. சங்கங்களை இன்று பழைய நிலைக்குக் கொண்டுவர முடியுமா?

ஜனுப் அபுசாலி: பாவனைப் பொருள்கள் எல்லா மக்களுக்கும் சமமாகப் பங்கிடப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டே சங்கங்களில் தமது நியமன உறுப்பினர்கள் இருக்க வேண்டுமென அரசாங்கம் கருதுகின்றது. வடபகுதியைப் பொறுத்தவரை பாவனைப் பொருள்களின் பங்கீட்டில் எதுவித சஷ்டமுமில்லை.

### நாட்டின் சீரழிவுக்குக் காரணம்

திரு. சு. நேசையா: சமாதான காலத்தில எந்த நாட்டிலும் பங்கீட்டுமுறை தேவைப்படாது. பங்கீட்டு முறை கூட்டுறவு இயக்கத்திற்கு "மிண்டு" கொடுக்கத் தேவையில்லை. அரசாங்கம் திட்டமிடலில் ஒரு முக்கிய துறையாகிய கூட்டுறவை மறந்து விட்டது. ப. நோ. கூ. சங்கத்தின் நோக்கம் பொருளியல் சார்ந்ததல்ல. ஒழுங்கான சமுதாயத்தை இந்நாட்டில் உருவாக்குவது கூட்டுறவு இயக்கத்தின் இலட்சியம். கீழிருந்துதான் சமுதாயம் கட்டியெழுப்பப் படவேண்டும் இத்தகைய சமுதாய தத்துவமும், அமைப்பும் இங்கு நிலவாததால்தான் நாடு இன்று சீரழிகின்றது. யாழ் நகரில் ஒரு கூட்டுறவுப் பேரங்காடி நிறுவப்பட வேண்டும்.

திரு. கந்தையா : சங்கங்கள் பாண்சாலைகள் போன்ற சிறுகைத் தொழில்களை ஆரம்பித்து பாவனையாளர்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்து வழங்க வேண்டும்.

திரு வீரமன் : இப்போது சங்கங்கள் கட்டிடமைப்பந்தங்களைக் கூட மேற்கொள்கின்றன.

திரு. கந் : மாவட்ட அல்லது பிரதேச அடிப்படையில் சங்கங்களை நிறுவி அவற்றில் மற்றச் சங்கங்களை இணைக்கலாம்.

திரு. வீர : இரண்டாம் மட்டத்தில் சிறு சங்கங்கள் இருக்க முடியாது.

### ஆங்கிலத்தின் அவசியம்

திரு வ. பொன்னம்பலம்: கூட்டுறவுக் கல்லூரியை நாமே நடாத்துவதற்கு எமக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். உண்மையான கூட்டுறவு இயக்கத்தில் தாய்ப் பாஷையைப் பேசும் உரிமையை நாம் நசுக்கக் கூடாது.

திரு. வீர : கூட்டுறவு சர்வதேச இயக்கமாக இருக்கின்றபடியால் கூட்டுறவுப் பரிசோதகர் முதலியோருக்குப் பிரதேச வகுப்புக்களை நடாத்தும் சந்தர்ப்பங்களில் ஆங்கிலத்தில் போதிக்கலாம் இந்தியாவில் தேசிய மொழிகள் பல இருந்தாலும் ஆங்கிலத்தில் போதிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுப் பாடசாலை இருப்பது அவசியந்தானா?

பொன்: எமது கிராம மக்களில் பெரும்பாலானவர்கள் பல்கலைக் கழகங்களில் இருந்தாலென்ன, வெளியில் இருந்தாலென்ன தாய் மொழியிலே கல்வி கற்றிருக்கின்றனர். எனவே உயர் மட்டத்தில் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது கடினமாக இருக்கும்.

கூட்டுறவு இயக்கத்தினூடாகக் கடன் வசதி வழங்குவது பற்றி உரை

யாடல் நடைபெ
போது ஜனுப் அபுசா
நோ. கூ. சங்கங்களி
கவா அல்லது ஐ. நா
சங்கங்களினூடாகவா
கள் வழங்கப்பட
டும் என்று வினவி
இதற்கு திரு. கந்
ஐ. நா. சங்கங்கள்
களை வழங்கலாம்
குறிப்பிட்டார்.

திரு. வீர : ஐ. நா
கூட்டுறவிற்குப் பெ
உதவியுள்ளன.

திரு. பொன்; சில
களில் அவை வெற்
மாக இயங்கியுள்ளன
பகுதிகளில் படுதோ
டைந்துள்ளன.

றவு வங்
மிருந் மக்கள்
கையேற் வே
மீண்டும் கூட்டுறவு
களுக்குக் கையளிக்க
டும் என திரு. கந்
குறிப்பிட்டபோது
வீரமன் மக்கள் வங்
கூட்டுறவு வங்கியாக
றுவது இதைவிடச் சு
எனக் கூறினர்.

கூ. மொ. வி. தாப
தேவையில்லை
அதற்குப் பதிலாகப்
னையாளர் சம்மே
ஒன்று நிறுவப்பட
டும் என்றும் ! ஆலோ
முன்வைக்கப்பட்டது.
சந்தர்ப்பத்தில் ஜனுப்
சாலி நகரப் புறங்
பாவனையாளர் சங்கங்
யும், கிராமப்பகுதி
ப. நோ. கூ. சங்கங்
யும் த்தால்
என்று கட்டார்.
ஆட்சேபனை இல்லை

---

# கூட்டுறவின் குறிக்கோள்

# வளர்முக நாடுகளிலே அவற்றின் வெ

**P. E. வீரமன்**

அனைத்துலக கூட்டுறவு நிறுவனத்தின் தென்கிழக்காசிய பிரதேச அலுவலகத்தின் முன்னாள் நெறியாளர்

(முற்றொடர்)

பதிவு காரியஸ்தரின் நடைமுறைத் தலைமையால் ஏற்பட்டுள்ள பலாபலன்களை இனிப்பார்ப்போம். ஏறக் குறைய 60 ஆண்டுகளாக தாமே வழிநடாத்தி நெறிப்படுத்தி கட்டுப்படுத்தி வந்துள்ள இயக்கத்தைக் குறை கூறுவதில் பதிவு காரியஸ்தரே முதன்மை வகிக்கின்றனர். பதிவு காரியஸ்தருக்குள்ள அதிகாரங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அப்படியிருந்தும் இயக்கம் மேம்படாவிட்டால் இந்த அதிகாரங்களினால் கூட்டுறவு இயக்கத்திற்கு எதுவித பயனுமில்லை என எண்ணுவதில் தவறில்லை. ஏறக்குறைய 25 ஆண்டுகளாக பதிவு காரியஸ்தரின் அதிகாரங்களைக் கையாண்டவர் என்ற முறையில் நான் இங்கு பேசுகிறேன். இந்த அதிகாரங்களால்தான் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடையே பாராமுக உணர்வு வளர்ந்திருக்கின்றது எனலாம். பதிவு காரியஸ்தர் வேண்டியவற்றைச் செய்வார்தாமே என உறுப்பினர்கள் சுய திருப்தியுடன் இருந்து விடுகின்றனர். பதிவுகாரியஸ்தரிடம் அதிகாரங்கள் இருக்கும் போது நாம் ஏன் திருத்த வேலைகளில் ஈடுபடவேண்டும்—அவ்வாறு செய்ய விழையின் வீண் பகையும் பழியும் ஏற்படலாம் என உறுப்பினர்கள் எண்ணத் தலைப்படுவது இயல்புதானே. பதிவுகாரியஸ்தரிடம் இத்தகைய அதிகாரங்கள் இல்லாவிடின் உறுப்பினர்களின் விழிப்புணர்வு கூர்மையடைந்திருக்கும். ஆனால், இன்றோ "எமக்கு ஏன் இந்தத் தலையிடி, அரசாங்க உத்தியோகத்தர்தான் இருக்கிறாரே இவற்றையெல்லாம் சிக்கறுக்க" என உறுப்பினர் கருதுகின்றனர், ஆகவே கூட்டுறவு இயக்கத்திலே கூட்டுறவுத் தலைமை உருவாகாததற்கு பதிவு காரியஸ்தரின் நடைமுறைத் தலைமையே முக்கிய காரணம் எனலாம்.

இது முரண்பாடாகத் தோன்றினும் உண்மையே.

இந்த அதிகாரங்களைப் படிப்படியாக அகற்றுவதற்கு—இவற்றை ஒரேயடியாக உடனே நீக்க முடியாது—நாம் திட்டமிட வேண்டும் என வற்புறுத்த விரும்புகிறோம். ஒரு புறம் அரசாங்கத்திற்கு கூட்டுறவு முகவர் தேவைப்படுகின்றனர். மறுபுறம் தமது சங்கங்களின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதற்குத் தம்மைத் தயார்படுத்த கூட்டுறவாளருக்குப் போதிய அவகாசம் தேவை. இதுவரை காலமும் பதிவு காரியஸ்தரின் வழி நடாத்துதலை தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள் எதிர்பார்த்து வந்திருக்கின்றனர். அவர்கள் படிப்படியாக முழுப் பொறுப்பையும் கையேற்க வேண்டும் இப்பொழுதும் கூட தோல்விகளுக்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டியிருக்கின்றது ஆனால் உண்மையில் இத் தோல்வியின் பொறுப்பு பதிவு காரியஸ்தரையே சாரும். முடிவுகளை எடுப்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள் முழுப் பொறுப்பையும் ஏற்கும் போதுதான் தோல்வியும், பொறுப்பும் அவர்களைச் சாரும். தோல்வி ஏற்படும் என நாம் அஞ்சவேண்டியதில்லை. ஏனெனில் முடிவுகளை எடுப்பதில் பதிவு காரியஸ்தருக்கு பங்கில்லாமல் இருக்கும்போதும் கடன் பெறும், கடன் வழங்கும் உச்ச எல்லைகளை வரையறுக்கும் முழு அதிகாரமும் வருமதிகளைக் கழித்தெழுதும் அதிகாரமும் சங்கங்களையே முழுக்க முழுக்கச் சாரும் போதும் கூட்டுறவுத் தலைவர்களின் பொறுப்புணர்வு விருத்தி பெறும் எனவே இன்றைய நிலையிலிருந்து வாபஸ்

பெறுவதற்கு அரசா
திட்டம் வகுத்தல்
டும்: வழிநடாத்துநர்
டுப்பாட்டதிகாரி
நிலையைக் கைவி
ஆலோசனை வழங்குப
ஊக்குவிப்பவர்
நிலைக்கும் பின்னர்
நிலை வகிப்பவர்
நிலைக்கும் அரசா
பின்வாங்குதல் வேண்
சங்கங்கள் வகைப்படு
படலாம். கடன் பெ
தற்கு பதிவு காரியஸ்
அங்கீகாரத்தைப்
வேண்டும் என்

ருந்து நன்கு இயங்கி
துள்ள சங்கங்களு
விலக்களிக்கலாம்.
வேளையில் நெறியாள
நியமிக்கும் அதிகாரத்
யும், சங்கங்கள் மீது

# ... அரசாங்கத்தின் முகவரல்ல"

## ...டுறவு மறுசீரமைப்பு விசாரணையின்போது திரு. வீரமன் கருத்து

...டல் நடைபெற்ற ...து ஜனுப் அபுசாலி ப. ...ா. கூ. சங்கங்களினூடா ...ா அல்லது ஐ. நா. சங் ...களினூடாகவா கடன் ... வழங்கப்பட வேண் ... என்று வினவினர். ...ற்கு திரு. கந்தையா ...நா. சங்கங்கள் கடன் ... வழங்கலாம் என்று ...ப்பிட்டார்.

...ரு. வீர: ஐ. நா. ச. ...டுறவிற்குப் பெரிதும் ...வியுள்ளன.

...ரு. பொன்: சில பகுதி ...ல் அவை வெற்றிகர ... இயங்கியுள்ளன. சில ...திகளில் படுதோல்விய ...ந்துள்ளன.

...றவு வங்...ளிட ... மக்கள் ...ங்கி ...யந்... வே... களை ...டும் கூட்டுறவு வங்கி ...க்குக் கையளிக்கவேண் ... என திரு. கந்தையா ...ப்பிட்டபோது திரு. ...ன் மக்கள் வங்...யைக் ...டுறவு வங்கியாக மாற் ...து இதைவிடச் சுபலம் ... கூறினர்.

..., மொ. வி. தாபனம் ...வயில்லை என்றும் ...ற்குப் பதிலாகப் பாவ ...ாளர் சம்மேளனம் ... நிறுவப்படவேண் ... என்றும் ஆலோசனை ...வைக்கப்பட்டது. அச் ...ர்ப்பத்தில் ஜனுப் அபு ... நகரப் புறங்களில் ...னையாளர் சங்கங்களை ... கிராமப்பகுதிகளில் ...நா. கூ. சங்கங்களை ...கூ...த்தால் என்ன ... கேட்டார். ...தற்கு ...சேபனை இல்லை என்று திரு. கந்தையா தெரிவித்தார்.

### பணியாளருக்குப் பயிற்சி

கூட்டுறவு இயக்கத்திற்குப் பணியாளர்களைச் சேர்ப்பது பற்றிய விடயம் குறித்து கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டபோது மாவட்ட நிறுவனம் சங்கங்களுக்குத் தேவையான பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டுமென்றும், இப்பணியாளர் மாவட்ட அடிப்படையில் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் திரு. கந்தையா குறிப்பிட்டார்.

### ஆட் சேவை

வெவ்வேறு வகைப் பணியாளர்கள் அடங்கிய ஆட்சேவை ஒன்று உருவாக்கப்படவேண்டும். இச் சேவையில் பெரிய சங்கங்களிலும் இடம்பெறக்கூடிய பணியாளர்கள் அடங்கவேண்டும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினர். அச்சந்தர்ப்பத்தில் ஜனுப் அபுசாலி கூட்டுறவுச் சங்கங்கள் தமது பணியாளர்களுக்குக் குறைந்த சம்பளங்களை வழங்குகின்றன என்ற குற்றச்சாட்டை எவ்வாறு தவிர்த்துக் கொள்ளலாம் என்று கேட்டார். திரு. வ. பொன்னம்பலம், கூட்டுறவுப் பணியாளர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட சேவை இருக்க வேண்டும் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்கள் ஏனைய துறைகளில் வழங்கப்படுவனவற்றிற்கு ஒத்ததாக இருக்க வேண்டும் என்று அதற்குப் பதிலளித்தார்.

கூட்டுறவுத் திணைக்களத்தில் பணியாற்றுவோர் நன்கு பயிற்றப்பட்டவர்களாக இருக்க வேண்டும். கூட்டுறவு இயக்கத்தின் எதிர்கால வளர்ச்சி கருதி கூட்டுறவுத் திணைக்களம் 'மூடுண்ட' திணைக்களமாக இருத்தல் வேண்டும் என்ற கருத்துக்கள் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

### தனியான அமைச்சு

கூட்டுறவுக்கெனத் தனியான ஓர் அமைச்சு இருத்தல் வேண்டும். அதன் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் சமூக அபிவிருத்தி, குடிசைக்கைத்தொழில்கள் போன்றவை இயங்கவேண்டும் என்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய சகல பொருள்களையும் இறக்குமதி செய்வதற்கு தேசிய பாவனையாளர் சம்மேளனம் ஒன்று ஒருவாக்கப்பட வேண்டும் என்றும் இறக்குமதி உரிமை தனியார் துறைக்குக் கையளிக்கக் கூடாதென்றும் திரு. கந்தையா வற்புறுத்தினர்.

### அரசியலால் சீர்குலைவு

அரசியல் நியமனங்களால் கூட்டுறவு இயக்கம் சீர்குலைந்து விட்டதென பண்டிதர் க. யோ. ஆசிநாதர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார். கூட்டுறவு இயக்கம் அரசியல் தலையீட்டினுல் இன்று மிகவும் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டதெனறும் அவர் கூறினர். இந்த நிலையைச் சீர் செய்வதற்கு கூட்டுறவு இயக்கம் சுதந்திரமான இயக்கமாக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தினர்.

இரண்டாம் நாள் அமர்வு காலை நிகழ்சியில் சாட்சியமளிக்கவிருந்த வடமாகாணம் கடற்றெழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் திரு. K S. பொன்னுத்துரை சுகயீனம் காரணமாகச் சாட்சியமளிக்க இயலாத நிலையில் இருப்பதால் அவர் தனது சாட்சியத்தைக் கொழும்பில் அளிப்பதற்கு வாயப்பளிக்குமாறு கேட்டிருப்பதாகத் திரு. கந்தையா தெரிவித்தார். ஆணைக்குழு அவ்வாய்ப்பை அளிக்க உடன்பட்டது.

### விற்பனை நிலையங்களுக்கு ஏகபோக உரிமை

இன்றைய நிலையில் சங்கங்கள் மீண்டும் பழைய நிலைக்குச் செல்லமுடியாது. கூப்பன் முறை குறைக்கப்பட்டதால் சங்கங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆதலால் அவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு விற்பனை நிலையங்களைக் கூடுதலாக நிறுவி அவற்றிற்கு ஏகபோக உரிமை வழங்கப்பட வேண்டும் என்று திரு. மார்ட்டின் செல்லையா சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

அப்போது திரு. வீரமன் கூட்டுறவு இதற்குத் தீர்வாக இருக்குமா எனறு வினவினர்.

இன்று ப. நோ. கூ. சங்கங்கள் அரசாங்க விற்பனை நிலையங்களாகி விட்டன. இத்தகைய நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்க இயலாது என்று கூறிய திரு. மார்ட்டின் செல்லையா, முன்பு உற்பத்தியாளர்கள். வெங்காயத்தைப் ப. நோ சங்கத்திற்குக் கொடுத்தார்கள். ஆனல் இப்போது அவர்கள் தனிப்பட்ட வியாபாரிகளுக்குக் கொடுத்து வருகின்ருர்கள் என்று தெரிவித்தார்.

ஜனுப் அபுசாலி: சங்கங்கள் உற்பத்தியாளர்களின் இடங்களுக்குச் சென்று வெங்காயத்தை வாங்கினுல் என்ன?

### விசுவாசமில்லை

திரு. மார்ட்டின் செல்லை: சங்கத்தில் பலருக்கு விசுவாசமில்லாதபடியால் இவவாறு நடக்கிறது. அத்தோடு ப. நோ. கூ. சங்கங்கள் இவற்றை வாங்கி களஞ்சியப்படுத்துவதற்கு களஞ்சிய வசதிகள் இல்லை.

கூட்டுறவுப் பணியாளர்களின் தொழிற் சங்கப் பிரதிநிதிகளாக திருவாளர்கள் நாகேந்திரம், S. R. திருச்சிற்றம்பலம், நவரத்தினம், வேலாயுதம் ஆகியோர் சமுகமளித்தனர்.

### தேர்தல் தொகுதி அடிப்படையில் பெரிய சங்கங்கள்

அவர்கள் சார்பில் திரு. நாகேந்திரம் பேசுகையில் கூறியதாவது: தேர்தல் தொகுதி அடிப்படையில் பெரிய சங்கங்கள் நிறுவப்பட வேண்டும் என்று நாம் கோருகின்ருேம். உற்பத்தியாளர் அல்லது பாவனையாளர் சங்கங்களாயின் சிறிய அளவில் சங்கங்கள் அமையலாம் ஆனல் வேலைவாய்ப்புக்களைப் பெருக்கும் பொருட்டு பெரிய சங்கங்களாக அமைவது உகந்ததெனக் கருதுகின்ருேம். நாம் எமது உறுப்பினர்களின் நலன்களை மட்டுமல்ல, ஒரு பகுதியின் சகல தேவைகளையும் கூட்டுறவு இயக்கத்தினூடாகப் பூர்த்தி செய்வதை மனதிற்கொண்டே இதனைக் கூறுகின்ருேம்.

திரு. வீர: எம்மைப் பொறுத்தவரை கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களின் நலனே மேலானது,

திரு. நாகே: இப்பொழுது சங்கத்தில் உறுப்பினராகச் சேர்பவர்கள் சங்கத்தின் நலனில் அக்கறை கொள்வதில்லை. கடன் வசதிகள் போன்ற நன்மைகளைப் பெறுவதே அவாகளது அக்கறையாக இருக்கின்றது.

திரு. வீர: பல கிளைகளைக் கொண்ட பெரிய சங்கங்களாக அமையும் பொழுது சீரான நிருவாகத்திற்குப் பங்கம் ஏற்படுகின்றது. எனவே, ஒன்று அல்லது இரண்டு கிராமங்களைத் தனது தொழிற்பரப்பிற்குள் அடக்கிய ப. நோ. கூ. சங்கமாக இருந்தாலும் எல்லா உறுப்பினர்களோடும் இடையருத தொடர்பு இருப்பதற்கும் நிருவாகத்தைச் சீராக நடாத்துவதற்கும் ஏதுவாக இருக்கும்;

### பணியாளர் ஆணைக்குழு

தனது சாட்சியத்தில் திரு. நாகேந்திரம் மேலும் கூறியதாவது: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும் இதன் மூலம் பணியாளர் தொடர்பாக எல்லா விடயங்களையும் விரைவாகத் தீர்த்துக் கொள்ளலாம். இப்போது கொழும்பிலுள்ள கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு தொடர்ந்திருக்க வேண்டுமாஞல் அது கொள்கை சம்பந்தமான விடயங்கள் குறித்தே பணியாற்ற வேண்டும்.

திரு. தேவநாயகம்: கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவை பன்முகப்படுத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் கிளைகளை நிறுவுவது பொருத்தமாயிருக்காதா?

திரு. நாகே: மாவட்ட மட்டத்தில் மேன் முறையீட்டுச்சபை அமைக்கப்பட வேண்டும் தேசிய மட்டத்தில் மேன்முறையீட்டுச் சபை அமைக்கப்பட வேண்டும். தேசிய மட்டத்தில் கொள்கைகளை வரையறுக்கும் சபை அமைக்கப்படல் வேண்டும்.

குறிப்பிட்ட பணிகளினதும், சேவைகளினதும் அடிப்படையில் கூட்டுறவுப் பணியாளர் தரம் பிரிக்கப்படவேண்டும் என திரு நாகேந்திரம் குறிப்பிட்டார்,

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

# ...ள்களும் கொள்கைகளும்- ...ன் செயற்பாடுகளும்

...வதற்கு அரசாங்கம் ...டம் வகுத்தல் வேண் ... வழிநடாத்துநர் கட் ...ாட்டதிகாரி என்ற ...யைக் கைவிட்டு ...ாசனை வழங்குபவர், ...தவிப்பவர் என்ற ...கும் பின்னர் நடுவு ... வகிப்பவர் என்ற ...கும் அரசாங்கம் ...ாங்குதல் வேண்டும். ...கள் வகைப்படுத்தப் ...ாம். கடன் பெறுவ ... பதிவு காரியஸ்தரின் ...கார த்தைப் பெற ... என்ற ...யிலி விதிகளைத் திணிக்கும் அதிகாரத்தையும் கையாளாது பதிவுகாரியஸ்தர் விட வேண்டும். பூரணமான திட்டமொன்றினை இங்கு வரையறுக்க நான் விழையவில்லை. இன்றைய நிலையிலிருந்து எவ்வாறு அரசாங்கம் படிப்படியாக, ஆனல் உறுதியாக பின்வாங்கலாம் என்பதற்கு சில உதாரணங்களை மட்டும் இங்கு தந்திருக்கின்றேன். இவ்வாறு செய்யப்பட்டு வந்தால் ஆகக்கூடியது 25 ஆண்டுகளுக்குள் கூட்டுறவு இயக்கம் தன்னுட்சி உரிமை பெற்ற, தன்னிருப்பார்ந்த இயக்கமாகத் திகழும்.

வேண்டுமாயின் இன்னொரு துறையிலும் அரசாங்கம் பின்வாங்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் உயர் பதவிகளுக்கு அரசாங்க உத்தியோகத்தரை தற்காலிகமாக நியமிக்கும் இன்றைய நடைமுறையை நான் இங்கு குறிப்பிடுகின்றேன். முகாமை நெறியாளர்களாகவும், பொது முகாமையாளர்களாகவும் வேறு குறைந்த பதவிகளிலும் இன்று அரசாங்க உத்தியோகத்தர்கள் பணியாற்றுவது வழக்கம். இத்தகைய ஓர் உத்தியோகத்தர் உண்மையில் பயனுள்ள முறையில் சேவையாற்றத் தொடங்கும் போது அவர் மீண்டும் அரசாங்க சேவைக்கு மாறிச் செல்வதற்குக் காலமாகி விடுகின்றது. பின்னர் இன்னொரு அரசாங்க உத்தியோகத்தர் வருவார். அவருக்கும் இவ்வாறே நடைபெறும். இதனுல் சிறந்த நிறைவேற்றுத்துறை உத்தியோகத்தர்களை தமக்கென கூட்டுறவுச் சங்கங்கள் வளர்த்தெடுக்க முடியாதிருக்கின்றது. அரசாங்க நிருவாகிகளின் பயிற்சிக் களமாகவே கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன. தமக்கு வேண்டிய முகாமை அலுவலரைப் பெறுவதற்கு அரசாங்கத்திலேயே அவை தங்கவேண்டியுள்ளன. அரசாங்க உத்தியோகத்தர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றுவதால் சங்கங்களின் தன்மை—அவை மக்கள் நிறுவனங்கள் என்ற முறையில்—பாதிக்கப்படுகின்றன. இவ்வுத்தியோகத்தரை அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகவும், சங்கத்தை அரசாங்கத்தின் நிறுவனமாகவும் கருதுவதற்கு உறுப்பினர்கள் தலைப்படுகின்றனர். அது மட்டுமன்று, முடிவுகளை எடுக்கும் பொறுப்பை உறுப்பினர்கள் அரசாங்க உத்தியோகத்தரிடமே விட்டு விடுவதால் சங்கத்தின் மீதான தமது கட்டுப்பாட்டதிகாரத்தையும் அவர்கள் இழக்கின்றனர்.

... நன்கு இயங்கிவந் ... சங்கங்களுக்கு ...ளிக்கலாம். அதே ...பில் நெறியாளரை ...க்கும் அதிகாரத்தை ...சங்கங்கள் மீது உப... உண்மையான கூட்டுறவு வளர்ச்சி ஏற்பட...

(வளரும்)

(முற்றொடர்)

# கணக்கியல் விகிதாசாரங்களின் ஆய்வு

8.6. கூட்டுறவுச் சங்கங்கள் உச்ச இலாப நோக்குடைய அல்லவெனினும் நியாயமான இலாபகரத்தை அடைவது அவசியமாகும். பின்வரும் தேவைகளுக்கான இலாபத்தை மதிப்பீடு செய்து அதனடிப்படையில் இலாபம் அடையப்படுகின்றன என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(அ) எதிர்பாராத அபாயங்களைத் தாங்க
(ஆ) முதல் வளர்ச்சிக்கு
(இ) பங்கு மீது வட்டி செலுத்த
(ஈ) ஆதரவுக்கேற்ற செல்லுபடி செலுத்த
(உ) பணியாளர்களுக்கு மிகையூதியம் வழங்க
(ஊ) விலையேற்ற காலங்களில் நிலையான சொத்துக்களை பிரதியீடு செய்வதற்குத் தேவையான மேலதிகாரிக்கு
(எ) சமூக கலாசாரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு.

8.7. ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை உதாரணமாக எடுத்து நோக்கின் வருமானத்தை உழைக்கும் எல்லாப் பகுதிகளும் சமமான முதலீட்டின் மீது வருமான விகிதத்தை அடைய முடியாது என்பதை அறிவோம். உதாரணமாக கிராமிய வங்கியை எடுத்து நோக்கின் கொடுகடனுக்கும், கொடுகடன் வட்டிக்கும், படுகடன் வட்டிக்குமுள்ள வட்டி வித்தியாசம் 4% மாகும். இதுவே அப்பகுதியின் மொத்த இலாப எல்லையாகும். தொழிற்பாட்டுச் செலவுகளுக்கும் பொதுப் பரிபாலனச் செலவுகளுக்கும் வரிக்கும் இந்த 4% மொத்த இலாபத்திலிருந்தே கிராமிய வங்கி பகுதி செலுத்த வேண்டியிருப்பதால் அடையக்கூடிய முதலீட்டின் மீது இலாப வீதம் 4% கீழ்தான் இருக்க முடியும். நுகர்ச்சிப் பகுதியில் கையாளப்படுகின்ற பாண் வியாபாரத்தை நோக்கின் முதலீட்டின் மீது வருமானம் ஆச்சரியப்படக்கூடியளவுக்கு உயர்ந்த வீதமாக இருப்பதைப் பின்வரும் உதாரணம் காட்டும். 100 இருத்தல் பாண் வியாபாரத்தை எடுத்துக் கொண்டால் அதற்குத் தேவையான மொத்த முதலீடு 60 ரூபாவாகும். இம்முதலீட்டுடன் 365 நாட்களும் பாண் விற்கப்படுவதெனக் கொண்டால் முதலீட்டுச் சுழற்சி 365 முறை இடம்பெற்று அதனுடைய வருடாந்த விற்பனை (64 ரூபா 365) 23360 ரூபாவாகும். சராசரி இருத்தலொன்றுக்கு கிடைக்கும் மொத்த இலாபம் 4 சதத்தில் செலவுகளுக்கு 3 சதத்தை ஒதுக்கிய பின் ஒரு சதம் தேறுமெனக் கொண்டாலும் வருடாந்த முதலீட்டின் மீது வருமானம் 608% மாக இருக்கும். ஆகவே, சங்கங்களின் மொத்த இலாபகரத்தை ஆராய்வதில் பந்தி 8.6. இல் கூறப்பட்டுள்ள தேவைகளுக்கு போதிய இலாபம் அடையப்பட்டுள்ளதா என்பதைக் கவனிப்பதோடு சங்கத்தின் வருமானத்தை உழைக்கும் ஒவ்வொரு தொழிற்பகுதியும் அடையக்கூடிய இலாபத்தை அடைந்துள்ளதா என்பதும் நோக்கப்படுவது அவசியமானதாகும்.

8.8. ஒவ்வொரு முகாமையாளரும் இலாபகரத்தை அதிகரிப்பதற்கு பொறுப்புடையவர்கள் என்பதைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு முகாமையாளருக்குமான இலாபகர நியமம் அல்லது இலக்கு உருவாக்கப்பட்டு அதனடிப்படையில் இலாபகரத்தைப் பேணுவதில் ஒவ்வொரு முகாமையாளரினதும் வினைத்திறனும் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். இதற்கு வருமானத்தை உழைக்கும் ஒவ்வொரு முகாமையாளர் மட்டத்திலும் செய்யப்பட்டுள்ள முதலீடுகளையும், உழைத்த வருமானத்தையும் கண்டு, வருமான வீதம் கணிக்கப்படல் வேண்டும்.

9. திரவத் தன்மையை ஆராய்வதில் விகிதாசாரத்தைப் பிரயோகித்தல்

9.1. நடப்புச் செல்மதிகளைத் தீர்க்கப் போதியளவு பணம் கையிருப்பில் வைத்திருப்பது திரவத் தன்மையைப் பேண அவசியமாகும். அதாவது கடனளிகள் தமது கடனைக் கேட்கும்போது அவற்றைத்தீர்ப்பதற்குப் போதிய பணம் தேவை. இந்த நிலையைப் பாதுகாக்கக் கூடியளவுக்கு திரவத்தன்மை இல்லாதுவிடின் பலதரப்பட்ட ஆபத்துக்களை தாபனம் எதிர்நோக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்படும். நடப்புக் கடன் தேவைகள் தீர்க்க முடியாத நிலை ஏற்படும் பொழுது கடன் கொடுத்தோர் கடனைத் தீர்க்கும்படி நெருக்குவார்கள்; மேலும் கடன் வழங்க மறுப்பர்; பொருட்கள், சேவைகளின் நிரம்பல் தடைப்படும்; உற்பத்தி தடைப்படும், விற்பனை பாதிக்கப்படும்; இலாபம் பாதிக்கப்படும்; ஈற்றில் குலைத்தல் நிலைக்கே தாபனம் தள்ளப்படலாம். இப்படியான நெருக்கடி நிலைகள் ஏற்படாமல் போதியளவு திரவத்தன்மை பேணப்படுகிறதா என்பது குறித்து முன்னெச்சரிக்கையாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். தேவைக்கு மிச்சமாக திரவத்தன்மை பேணப்படுவது விவேகமானதல்லஎன்பது கவனிக்கப்படவேண்டும். அவ்வாறு தேவைக்கு மிஞ்சுமானால் சாதனங்கள் உத்தம அளவில் பயன்படுத்தி அடைய வேண்டிய இலாபகரம் பாதிக்கப்படும். இலாபகரத்தைப் பற்றிப் பார்க்கும் பொழுது இது பற்றிக் குறிப்பிடப்பட்டது. நடப்புச் சொத்துக்கள் என்பன பணம் அல்லது பணமாக்கக் கூடிய நிலையில் இருப்பதேயாகும். இந்த நடப்புச் சொத்துக்கள் ஒரே நேரத்தில் பணமாக்கக் கூடியனவல்ல. இதனால் நடப்புச் செல்மதிகளைத் தீர்ப்பதற்குச் சமனான நடப்புச் சொத்துக்களைப் பேணுவது போதுமானதல்ல. அனுபவ ரீதியாக கணக்கியலறிஞர்கள் குறைந்தது நடப்புச் சொத்துக்களின் அளவு நடப்புச் செல்மதியில் இரண்டு மடங்குக்குச் சமனாக இருக்க வேண்டுமென வலியுறுத்துகின்றனர். நடப்புச் சொத்துக்கும் நடப்புச் செல்மதிக்குமிடையே இருக்க வேண்டிய விகிதாசார நியமம் எதிர்பார்க்கையை நிறைவேற்ற வேண்டுமானால் நடப்புச் சொத்துக்கள் எதிர்பார்த்தபடி பணமாக்கக்கூடிய நிலையில் இருக்க வேண்டும். ஐந்தொகையைச் சோடித்து பிழையான நிலையை வெளிப்படுத்தக்கூடும். வருடம் முடிவில் ஐந்தொகை சரியான திரவத்தன்மை நிலையை வெளிப்படுத்தக் கூடியதாக திட்டமிட்டுக் காட்டப்படலாம். எனவே அச்சொத்துக்கள் ஒவ்வொன்றினதும் பணமிக்க கூடிய தன்மையைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டும். நடப்புச் செல்மதியிலும் பார்க்க நடப்புச் சொத்துக்கள் இருமடங்கு அதிகமாக இருப்பின் அது போதிய பாதுகாப்பு எல்லையை வழங்கும். வியாபாரச் சரக்குச் சுழற்சி வேகம் சந்தேகத்துக்கிடமான சந்தர்ப்பங்களில் திரவச்சொத்துக்கும், நடப்புச் செல்மதிக்கும் இடையேயுள்ள விகிதாசாரம் பிரயோகிக்கப்படலாம். இந்த விகித நியமம் 1:1 ஆக இருப்பதாக கணக்கியல் அறிஞர்கள் அங்கீகரித்துள்ளார்கள். எனினும் இந்த ஆய்வை நோக்கும் பொழுது பாவிக்கப்படாத கடன் வசதிகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும். சங்கங்களைப் பொறுத்த மட்டில் வங்கி அங்கீகரித்த கடன் அதிகப்பற்று வசதிகள் பூரணமாக்கப்படாத நிலையில் இருக்கலாம். சரியான திரவத்தன்மை பேணப்படுவதை நிச்சயிப்பதற்குச் சிறந்த வழி மாதாந்த அடிப்படையில் உரொக்கப் பாதீடு தயாரித்து அதன் அடிப்படையில் செல்மதிகள் தீர்க்க வேண்டிய சந்தர்ப்பம் வரும்பொழுது தீர்க்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

ஆர். எம். நாகலிங்கம்
விரிவுரையாளர்
கூட்டுறவுக்கல்லூரி, பொல்கொல

9.2. திரவத்தன்மை நிலையைப் பாதிக்கக் கூடிய காரணிகள்

(அ) குறுகிய கால, மத்திய காலக் கடன்களைப் பெற்று நிலையான சொத்துக்களில் முதலீடு செய்தல்.
(ஆ) அசைய முடியாத சரக்கிருப்பில் நிதியை முடக்கல்.
(இ) சோர்வுகள் நட்டங்கள்.
(ஈ) உரொக்க மோசடிகள்.
(உ) நிலையான முதலுக்கு மேல் நிலையான சொத்துக்களில் முதலீடு செய்தல்.
(ஊ) நடப்பு முதல் மூலம் எல்லா நடப்புச் சொத்துக்களும் சொந்தமாக்கல்.
(எ) குறுகிய காலக் கடன்களைப் பெற்று நீண்ட காலக் கடன்கள் வழங்குதல்.

திரவத்தன்மை நிலை பற்றி ஆராயும் பொழுது ஐந்தொகையோடு சம்பந்தப்படும் ஏனைய விகிதாசாரங்களை கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டும்.

நிதிஓட்டக் கூற்றைப் பயன்படுத்தி நிதிநிலையால் ஏற்பட்ட மாற்றத்தை அறிந்து கொள்ளலாம்.

9.3. நுகர்ச்சிப்பகுதித் தொழிற்பாட்டு விகிதங்கள் :

நுகர்ச்சியாளருக்கு சராசரி விற்பனை
மொத்த நுகர்ச்சியாளர் சங்கச்சில்லறை விற்பனை நிலைய நுகர்ச்சியாளர்.
விற்பனைப் பணியாளருக்கு சராசரி விற்பனை
விற்பனையில் மொத்த இலாப %
விற்பனையில் சோர்வு %
விற்பனையில் தாரை கழிவு %
விற்பனையில் சம்பள %
விற்பனையில் ஏனைய விற்பனை விநியோகச் செலவு%
விற்பனையில் சுத்த இலாப %
(வெற்றுப் பொருள் வருமானம் சேர்க்க முன்)
விற்பனையில் வெற்றுப் பொருள் வருமான %
விற்பனையில் சுத்த இலாப வருமான %
(வெற்றுப் பொருள் வருமானம் சேர்த்த பின்)
பொதுப் பரிபாலனச் செலவு %
விற்பனையில் சுத்த இலாப வருமான %
(பொதுப் பரிபாலனச் செலவு நீக்கிய பின்)
தொழிற்பாட்டுச் சொத்துக்களின் சுழற்சி முறை
வியாபாரச் சரக்குச் சுழற்சி முறை
வியாபார வருமதியாளர் சுழற்சி முறை
வியாபார செல்மதியாளர் சுழற்சி முறை
தொழிற்பாட்டுச் சொத்து முதலீட்டின் மீது வருமான %

9.4. போக்குவரத்துப் பகுதித் தொழிற்பாட்டு விகிதங்கள்

சராசரி மாதாந்தம் ஓடும் மைல்.
சராசரி மாதாந்தம் ஓடிய தொன் மைல்
சராசரி கலன் பெற்ரோல் டீசலுக்கு ஓடிய தொன் மைல்
சராசரி எரிபொருள் செலவு/தொன் மைலுக்கு
சராசரி தொன் மைலுக்கு திருத்தச் செலவு
சராசரி மொத்தச்செலவு தொன் மைலுக்கு
சராசரி மொத்த இலாபம் தொன் மைலுக்கு
தொழிற்பாட்டு சொத்துக்களின் சுழற்சி முறை

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# அடுத்த ஆண்டு பாலர் ஆண்டாகப் பிரகடனம்

ஐ. நா. சபை 1979ஐ அனைத்துலக பாலர் ஆண்டாகப் பிரகடனம் செய்வதற்குத் தீர்மானித்துள்ளது. குழந்தைகளின் வாழ்வை நேரடியாகப் பாதிக்கவல்ல அடிப்படைச் சேவைகளை வழங்குவதில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதே இத்தீர்மானத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இப்பிரகடனம் குறித்து அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் மகளிர்குழு ஆராய்ந்த பின்னர், வளர்ச்சியுற்று வரும் நாடுகளிலேயுள்ள கிராமங்களிலும், நகரச்சுற்றுப் புறங்களிலும் சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு கூட்டுறவு இயக்கம் பெரிதும் உதவலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளது. இதற்கான செயல் திட்டங்கள் நன்னீரை வழங்குவதற்கு உதவுவதோடு கிராமவாசிகள் இத்திட்டங்களை கூட்டுறவு அடிப்படையில் நிருவகிப்பதற்கு வழி வகுக்கும் என மகளிர்குழு கருதுகின்றது. இதன்மூலம் கூட்டுறவு உதவி நடைமுறை உண்மையாகத் திகழும் என அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். நல்லெண்ணம் படைத்த தனிப்பட்டவர்கள் இத்திட்டங்களுக்கு உதவும்பொருட்டு ''ஒரு வாளி நீரை வாங்க உதவுங்கள்'' என்ற சுலோகத்தைத் தாங்கிய இயக்கமும் இது தொடர்பாக ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவுச் சங்கங்கள்...

அவர் மேலும் கூறியதாவது: கூட்டுறவுப் பணியாளர்கள் மாவட்டத்திற்குள் இடம் மாற்றம் செய்யப்படலாம். ஒரு பணியாளரின் ஆகக் குறைந்த வேதனம் ரூ 400/- ஆக இருக்கவேண்டும்.

திரு. தேவநாயகம்: ஆகக் குறைந்த கூலி அமைப்பு ஒன்றினை அரசாங்கம் வகுக்க இருக்கிறது. அப்பொழுது கூட்டுறவுத் துறையும் அதனால் பயனடையும்.

## நெறியாளர் தெரிவு செய்யப்பட வேண்டும்

ஆள் குறைப்பு பற்றி வினவப்பட்டபோது, இப்பொழுது அது சாத்தியமில்லை என்றும், நெறியாளர் குழு முழுக்க முழுக்கத் தெரிவு செய்யப்பட்டதாக அமைய வேண்டும் என்றும் திரு நாகேந்திரம் கூறினார். பணியாளர்களின் பயிற்சி குறித்து கூறுகையில் வெவ்வேறு வகையான வேலைக்கு ஏற்றதான பயிற்சி நெறிகள் நடாத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்தார்.

விசாரணைக் குழுவின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் சங்கங்களிலே மோசடிகள் நடைபெற்று வருவதை திரு. நாகேந்திரம் ஒப்புக் கொண்டார்.

பணியாளர் சேம இலாப நிதி வீதங்கள் உயர்த்தப்படவேண்டும் என்றும், லீவு வசதிகள் கூட்டப்படவேண்டும் என்றும் திரு. நாகேந்திரம் கூறினார்.

இப்பொழுது நெறியாளர் குழுவின் தொகை 15. இதை 7 ஆகக் குறைக்க வேண்டும். இதில் 6 தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரும், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினரும் இருத்தல் வேண்டும். அரசின் நலன்களைப் பேணுவதற்காக நியமன உறுப்பினர் இருக்கலாம்.

இவ்வாறு 26—5—78ல் சாட்சியமளித்த மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. சிவகுரு குறிப்பிட்டார்.

திரு. தேவ: கூட்டுறவுக் கொள்கைகளை நிருவாக உத்தரவுகளால் மீறலாகாது. முழுவதும் தெரிவு செய்யப்பட்ட நெறியாளர்களை உறுப்பினர் விரும்புகின்றனரா?

திரு சிவ: ஆம். ஒரு ரூபா உறுப்புரிமையை ஒழித்து விட்டு, பத்து ரூபா உறுப்புரிமை முறையை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும்.

திரு. டி.மெல்: ஒரு குடும்பத்தற்கு ஓர் உறுப்பினர் என்ற முறை சிறந்தது. இது யப்பானில் உள்ள முறையாகும். வீட்டுத்தலைவரே உறுப்பினராக இருக்கலாம்.

பணியாளர் குறித்து சாட்சியமளிக்கையில் திரு. சிவகுரு கூறியதாவது: தகைமைகளைக் கணிப்பில் எடுக்காது. ஆட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டதனாலே சோர்வுகளும், மோசடிகளும் அதிகரித்து விட்டன. இவற்றை மத்தியஸ்தத்திற்கு விடும்போது தீர்ப்பு பணியாளர்களுக்குச் சாதகமாக அமைகின்றது இப்போது நடைமுறையிலுள்ள மத்தியஸ்த முறை தவறானது. இதற்குப்பதிலாக கூட்டுறவு நீதிமன்றம் நிறுவப்பட வேண்டும். நீதித்துறை அனுபவம் வாய்ந்தவர்களை இம்மன்றுகளுக்கு அமைச்சர் நியமிக்கலாம். இத்தகைய முறை மூலம் வழக்குகளைச் சீக்கிரமாக முடித்து விடலாம்.

விவசாயக் கடன்களைப் பற்றிக் குறிப்பிடும்போது திரு. சிவகுரு குறிப்பிட்டதாவது: இப்போது கிராம வங்கிகள் விவசாயக் கடன்களை வழங்கி வருகின்றன. கடன் பெறத் தகுதியானவர்களை மேற்பார்வை செய்வதற்கு ஒருவருமில்லை. விவசாயக்கடனகளைப் பெறும் 40 வீதத்தினருக்குக் காணி இல்லை. கிராமிய வங்கி கடன் வழங்குவதைவிட மக்கள் வங்கியும், இலங்கை வங்கியும் கடன்களை வழங்க வேண்டும்.

## விசாரணை உத்தியோகத்தா

பணியாளர் ஆணைக்குழுவினது சட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக தனிப்பட்ட விசாரணை உத்தியோகத்தர் குழு இருத்தல் வேண்டும் என முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. மயில்வாகனம் குறிப்பிட்டார். இவருடன் முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர் திரு K. சரவணமுத்து சமுகமாயிருந்தார்.

இவ்விசாரணை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவடைய வேண்டும். ஓர் உத்தியோகத்தருக்கு எதிரான விசாரணை 6 மாத காலத்திற்குள் முடிவடையாது விட்டால் அவருக்கு அரைவாசிச் சம்பளம் கொடுக்க வேண்டும். ஒரு வருடத்திற்குமேல் செல்லுமாயின் முழுச்சம்பளமும் கொடுக்க வேண்டும் என்று மேலும் அவர் தெரிவித்தார்.

இதை நாம் ஒரு பொது விதியாக வைத்திருக்க முடியாது. விசாரணை உத்தியோகத்தர ஊழியருக்கு எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என திரு. தேவநாயகம் கூறினார்.

## கூட்டுறவிற்குத் தொழில் நீதிமன்றம்

திரு. வீர: கூட்டுறவுத் துறைக்குத் தொழில் நீதிமன்றம் இருக்க வேண்டும் என்று நீர் விரும்புகிறீரா?

திரு. மயில்: தொழில் நீதிமன்றம் தொழிலாளரின் நலன்களைக் கவனிப்பதற்கென்று இருக்கிறது.

திரு வீர: உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட தொழில் நீதிமன்றம் இருக்க வேண்டும் என்று விசாரணைக் குழு கருதுகின்றது.

## குற்றவாளி சுற்றவாளி விபரம் வேண்டும்

திரு. மயில்: கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு 18 (b)ல் குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தர் தனது நியாயங்களைக் கூறுவதற்கு சங்கத்திலிருந்து சில ஆவணங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் சில சங்கங்கள் அவைகளைப் பார்வையிடுவதற்குக் கொடுக்க மறுக்கின்றன. விசாரணை உத்தியோகத்தரின் முடிவின்படி நெறியாளர் சபை ஒத்துப்போக வேண்டும். சங்கங்கள் வழக்கமாக குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தர்கள் குற்றவாளி என்று காணப்பட்ட பின்பே அவர்களின் குற்றங்களைத் தெரிவிக்கும். இப்போதுள்ள நெறியாளர் சபைகள் குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தர்களைக் குற்றவாளி அல்லது சுற்றவாளி என்று கண்ட பின்பு கூட அந்த குற்ற விபரங்களைத் தெரிவிப்பதில்லை கூட்டுறவு ஆணைக்குழு போலி வாதம் உடையதாக மாறிவிட்டது.

திரு. தேவ: கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு உறுப்பினர் ஏறகெனவே ராஜினாமாச் செய்துவிட்டபடியால் அது இப்போது இயங்குவதில்லை.

## கூட்டுறவு ஆணைக்குழுவைத் திருத்தியமைக்க வேண்டும்

திரு. மயில்: இதனால் எத்தனையோ மேன்முறையீடுகள் கவனிக்கப்படாதிருக்கின்றன. பாதிக்கப்பட்ட ஊழியர்கள் இதனால் பல நெருக்கடிகளுககு ஆளாகி வருகின்றனா. மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் கூட்டுறவு ஆணைக்குழுவைத் திருத்தியமைக்கவேண்டும். பல உத்தியோகத்தரின் மேல் முறையீடுகள் கவனிக்கப்படாதிருக்கின்றன. இந்த உத்தியோகத்தர்களுள் பலர் உண்மையிலே குற்றமற்றவர்களாகஇருக்கலாம். எனவே பாதிக்கப்பட்ட இந்த உத்தியோகத்தர்களின் சார்பில் இவர்களது மேல்முறையீடுகளைக் கவனித்து ஆவன செய்யுமாறு ஆணைக்குழுவைக் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 7 ஆண்டுகளில் கூட்டுறவு இயக்கம் அரசியல் தலையீட்டினால் மிகவும் கீழ்நிலையை அடைந்துவிட்டது அரசியல் கட்சிகளின் தலையீடுகளின்றி கூட்டுறவு இயக்கம் மக்களின் இயக்கமாக மாறவேண்டும்.

இவ்வாறு அல்வாய் சமூக சேவைக் கழகத்தின் சார்பில் சாட்சியமளிக்கையில் திரு. பாலசிங்கம் குறிப்பிட்டார்.

தேர்தல் இடாப்புகளில் பெயர் உள்ளவர்கள் மாத்திரமே சங்கங்களில் உறுப்பினராகச் சேர்வதற்குத் தகுதியுடையவராயிருத்தல் வேண்டும் என்று மேலும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

சங்கத்தின் சேவையைப் பெறுபவர்கள் மட்டுமே ஒரு வீட்டிற்கு ஒருவர் என்ற முறையில் உறுப்பினராயிருத்தல் வேண்டும் என்று ஆணைக்குழு கருத்துத் தெரிவித்தது.

திரு பாலசிங்கம் மேலும் தெரிவித்ததாவது. பொருள்களை மோசடி செய்து விற்றுப் பணத்தைச் சிலர் சுருட்டிக் கொள்வதால் தான் சங்கங்களில் பெரும்பாலும் சோர்வுகள் ஏற்படுகின்றன. இச்செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராாகத் தக்க நடவடிக்கை எடுத்து அவர்களிடமிருந்து பணத்தை அறவிட வேண்டும்.

ஐ. நா. சங்கங்களுக்கு அரசு வழங்கும் கடன் குறித்த ஆட்களுக்குக் கிடைப்பதில்லை. தவறானவர்களுக்கே கிடைக்கின்றது ஐ நா. சங்கங்கள், கிளைச்சங்கங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

ஐ. நா. சங்கங்கள் ப. நோ. கூ. சங்கங்களுடன் இணைக்கப்படலாம் என்று ஆணைக்குழு கருத்துத் தெரிவித்தது.

வடமாகாணத்திற்கு ஒரு மேற்பார்வைச்சபையும், கிழக்கு மாகாணத்திற்கு ஒரு மேற்பார்வைச் சபையும் இருத்தல் வேண்டும். இத்தகைய மேற்பார்வைச் சபைகள் சிங்களப் பகுதிகளிலும் இருத்தல் இருத்தல் வேண்டும் இவ்வாறு இலங்கை முழுவதும் 12 மேற்பார்வைச் சபைகள் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு மேற்பார்வைச் சபைப் பகுதிக்கும் மூன்று மாவட்ட சபைகள் இருத்தல் வேண்டும். இவ்வாருக வரும் 36 மாவட்ட சபையின் பிரதிநிதிகளும் கொண்ட அகில இலங்கை கூட்டுறவுச் சம்மேளனம் இருத்தல் வேண்டும்.

மேற்படி கருத்தை பரந்தன் மாவட்டக் குழுத்தலைவர் பண்டிதர் க. யோ. ஆசிநாதர் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

கூட்டுறவிற்குத் தனியான ஓர் அமைச்சு இருத்தல் வேண்டும் என்று பண்டிதர் ஆசிநாதர் கூறிய போது, மாவட்ட அமைச்சர் நியமிக்கப்பட்ட பின்பு அவர்களிடம் கூட்டுறவைக் கையளிக்கலாமா என்று திரு; தேவநாயகம் கேட்டார் அதற்கு பண்டிதர் ஆசிநாதர் 'ஆம்' என்று பதிலளித்தார்.

அரசியல் நியமனங்களால் சங்கங்கள் பல நட்டங்களை அடைந்துள்ளன என்பதைக் குறிப்பிட்ட திரு ஆசிநாதர் தமது ஒரு சங்கம் முன்பு ரூ, 35,000 பெறுமதியில் கட்டிய ஒரு கட்டிடத்தை பின்பு நியமனம் மூலம் வந்த நெறியாளர் சபை ரூ 65 000 செலவில் திருத்தியுள்ளது என்று சுட்டிக் காட்டினார்.

(வளரும்)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

# புதிய அனைத்துலக...

கைத்தொழில்கள் புனரமைக்கப்படுதல் அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளுக்கும், வளர்முக நாடுகளுக்கும் ஒருங்கே பயன்தர வல்லது. அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளிலே, தொழில் சக்திகளையும், வேறு வள ஆதாரங்களையும் உற்பத்திக்குறைவான துறைகளிலிருந்து கூடிய உற்பத்தி ஆக்கத்துறைகளுக்கு மாற்றுவது பாவனையாளருக்கு உடனடியான நன்மைகளை விளைவிப்பதோடு நீண்ட கால நோக்கில் மொத்தத் தேசிய உற்பத்திப்பெருக்கத்திற்கும் வழி வகுக்கும். இது சமூக உடைமை நாடுகளுக்கும் பொருந்தும்: அங்கு முழு மொத்தமாக நோக்கும்போது ஆள் சக்தி தட்டுப்பாடு நிலவுவதோடு சில துறைகளிலே உற்பத்தி குறைந்தும் காணப்படுகின்றது. அத்துடன் உற்பத்தி ஆக்கத்தின தரத்தினையும் உயர்த்த வேண்டிய தேவை இருந்தது.

ஆரம்பத்திலே புதிய உலகப் பொருளாதார அமைப்பினாலே அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளிலே சில வேலை இழப்புக்கள் நேரிடலாம். மொத்தமாக நோக்கும்போது இத்தகைய வேலை இழப்பு குறைந்ததாக இருப்பினும், குறிப்பிட்ட சமுதாயங்களில் இத்தகைய வேலை இழப்பு உள்ளூர் தொழிற்படையின் குறிப்பிடத்தக்க விகிதாசாரமாக அமையலாம். எனவே, இடைக்கால மாற்ற நிலையை சுமுகமானதாக ஆக்கும்பொருட்டு, வர்த்தகக் கட்டுப்பாடுகளின் தளர்ச்சியினாலும் உற்பத்தி வாய்ப்புக்களின் மறுபங்கீட்டினாலும் நேரடியாகப் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கும், நிறுவனங்களுக்கும் திருப்திகரமான ஒழுங்குகள் செய்யப்படல் வேண்டும்.

(வளரும்)

# சோழப்பயிர்ச் செய்கைக்கு யப்பானிய உதவி

தாய்லாந்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சோழப் பயிர்ச் செய்கைக்கு யப்பானிய அரசாங்கம் உதவிவழங்க முன்வந்துள்ளது. இவ்வுதவி மூன்று ஆண்டு காலத்திற்கு (1977–79) வழங்கப்படும்.

ஆறு வல்லுநர்களின் உதவியையும (விதை உற்பத்தி, பயிர்ச் செய்கை, விவசாய இயந்திரங்கள், விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாய விரிவாக்கல் சேவைகள் ஆகிய துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர்கள்) பாரிய விவசாய இயந்திரங்களையும், இயந்திர சாதனங்களையும் யப்பானில் பயிற்சி பெறுவதற்கான புலமைப் பரிசில்களையும் இத்திட்டத்தின் கீழ் யப்பானிய அரசாங்கம் தாய்லாந்திற்காக வழங்கவிருக்கின்றது.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

# கணக்கியல்...

தொழிற்பாட்டுச் சொத்துக்களின் மீது சுத்த வருமான %
(வரி நீக்கிய பின்னும் முன்னும்)

9.5. இராமிய வங்கிப் பகுதி தொழிற்பாட்டு விகிதங்கள்:

சங்கத்தொழிற்பரப்பில் சேமிக்கக் கூடியவைகள்.

தொகை: சங்கத்தில் சேமிப்பவர்கள் தொகை

சராசரி வாடிக்கையாளர் சேமிப்பு வைப்பு.

சராசரி வாடிக்கையாளர் சேமிப்பு மீட்பு

சேமிப்பு வைப்பு வட்டி %: கொடுகடன் வட்டி %

படுகடன் வட்டி %: கொடுகடன் வட்டி %

சராசரி மொத்த இலாப %

சம்பள செலவு %

ஏனைய செலவு %

நட்டக் கடன் %

மொத்தச் செலவு %

சுத்த வருமான % (பொது பரிபாலனச் செலவு நீக்க முன்)

சுத்த வருமான % (பொது பரிபாலனச் செலவு நீக்கிய பின்)

தொழிற்பாட்டுச் சொத்துக்களின் சுழற்சி முறை.

தொழிற்பாட்டுச் சொத்து முதலீடடின் மீது வருமான வீதம் (வரி நீக்க முன்; வரி நீக்கிய பின்)

கடன் அறவீட்டு %

9.6. விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் பகுதி தொழிற்பாட்டு விகிதங்கள்

சங்கத் தொழிற்பரப்பிலுள்ள மொத்த நெல் நிலப் பரப்பு.

சங்கம் செய்கை பண்ணும் அல்லது உதவும் நிலப் பரப்பு.

சராசரி ஏக்கருக்கு வெளியீடு.

சராசரி ஏக்கருக்கு சங்கம் வழங்கும் உள்ளீடு

சராசரி ஏக்கருக்கு சங்கம் வழங்கும் கடன்

சராசரி தனி அலகு உள்ளிட்டு விநியோகப் பொருளின் இலாபம் (உ-ம் ஒரு அந்தர் பசளைக்கு)

உள்ளிட்டு இருப்புச் சுழற்சி முறை

சராசரி வெளியீடு (ஏக்கருக்கு இளைச் சங்கம் சங்கத் தொழிற்பரப்பிலுள்ள மொத்த விளைச்சல் சங்கத்துக்கு விற்கப்பட்ட விளைவு.

தனி அலகு சராசரி சந்தைப்படுத்தல் செலவு

தனி அலகுக்கான மொத்த இலாபம்.

தனி அலகுக்கான சுத்த இலாபம்.

சந்தைப்படுத்துவதற்கான சரக்குச் சுழற்சி முறை

அழிவு நட்ட %

தொழிற்பாட்டு சொத்துக்களின் சுழற்சி முறை

சுத்த இலாப %

முதலீட்டின் மீது வருமான %

9.7. கைத்தொழிற் பகுதி தொழிற் பாட்டு விகிதம்:

தனி அலகு வெளியீட்டுக்கு – மூலப் பொருள் செலவு.

தனி அலகு வெளியீட்டுக்கு – நேர் வேதனம்.

தனி அலகு வெளியீட்டுக்கு– ஏனைய செலவினம்.

தனி அலகு வெளியீட்டுக்கு – மொத்த ஆலைச் செலவு

தனி அலகுக்கு – மொத்த இலாபம்.

(வளரும்)

# வெளியார் தலையீடின்றி பலம் பொருந்திய இயக்கமாக வளர்க்கத் தீர்மானம்

இந்தியக் கூட்டுறவு இயக்கத்தினை வெளியாரின் அனுவசிய தலையீடின்றி மிதமிஞ்சிய கட்டுப்பாடின்றி பலம் பொருந்திய தன்னுட்சி உரிமையுள்ள இயககமாக வளர்ப்பதென புதுடில்லியில் கூடிய மாநிலக் கூட்டுறவு அமைச்சர்களின் மகாநாடு தீர்மானித்தது.

கூட்டுறவு இயக்கம் வலிமையற்றோரின் கவசமாக விளங்க வேண்டும், வலிமையுள்ளவர்களின் வாளாக அல்ல என அங்கு சுட்டிக் காட்டப்பட்டது. சிறு விவசாயிகளுக்கும், விவசாய கூலியாட்களுக்கும் கிராமப்புறக்|கைவினைஞர்களுக்கும் சாதாரண பாவனையாளர்களுக்கும் கூடிய ஆதரவு வழங்கப்பட வேண்டும் என்றும் இம்மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

கிராமப்புறங்களிலே உள்ள விவசாயிகளுக்கும் விவசாயம் சார்ந்த கைத்தொழில்களுக்கும், வங்கிக் கடன் வசதிகள் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக வழங்கப்பட வேண்டுமென்றும் இந்த ஆரம்பச் சங்கங்கள் சேமிப்பைத் திரட்டுவதில் ஈடுபடவேண்டும் என்றும் மகாநாட்டில் ஆலோசனை வழங்கப்பட்டது.

# ப. நோ. கூ. சங்க மாதாந்த வளர்ச்சி அறிக்கை

படிவம் 28ல் ப.நோ.கூ சங்கங்களின் மாதாந்த வளர்ச்சி அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுகுறித்து கூட்டுறவு ஆக்க ஆணையாளர் கீழ்க்காணும் 11/20/77/103 இலக்க சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளார்.

சில சங்கங்கள் ஒழுங்காகப் படிவம் 28ஐ தமக்கு அனுப்புவதில்லை என்று மக்கள் வங்கி எனக்கு அறிவித்துள்ளது. சங்கத்தின் வியாபார வளர்ச்சி பற்றி காலத்திற்குக்காலம் நெறியாளர் குழுவிற்கும், சங்கத்திற்கு நிதி வழங்கும் மக்கள் வங்கிக்கும் தகவல் கொடுக்கும் பொருட்டே இப்படிவம் வரையறுக்கப்பட்டது.

இந்த அறிக்கையினைக் குறித்த திகதியில் சங்கம் வங்கிக்கு அனுப்பத் தவறுவது சங்கத்தின் முகாமைத் திறமையின்மையையும் கட்டுப்பாடுகள் இன்மையினையுமே குறிக்கின்றது. இதனால் வங்கி கண்டிப்பாக இருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதோடு கடன் வசதிகளையும் கட்டுப்படுத்த வேண்டி ஏற்படலாம்.

எனவே, சங்கத்தின் நிறைவேற்றுத்துறை உத்தியோகத்தரைக் கொண்டு இம்மாதாந்த வளர்ச்சி அறிக்கைகளை தலைவர்கள் தாம் பெற்றுக் கொள்வதுடன் அடுத்துவரும் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் இவ்வறிக்கைகளில் ஒரு பிரதியைக் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளருக்கும் இன்னொரு பிரதியை மக்கள்வங்கிக்கிளைக்கும் நிறைவேற்றுத்துறை உத்தியோகத்தர் அனுப்பி வைப்பதை உறுதிப்படுத்தவேண்டும். இந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் ஏதாவது காலதாமதம் ஏற்பட்டால் மக்கள் வங்கியிடமிருந்து கடன் வசதி பெறுவதில் கஷ்டங்கள் ஏற்படலாம்.

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

## 19ம் நூற்றாண்டுத்...

களுக்காக மாற்றியமைக்கும் துணிவு ஈழத்துப் புலவர்களின் முக்கிய தனித்துவமாக அக்காலத்தில் விளங்கியது. நாவலரது அடிச்சுவட்டில் உருவான இந்த இலக்கியப் பரம்பரை 19ம் நூற்றுண்டின் இறுதிவரை ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மாற்றங்களின் முக்கிய போக்குகளை உருவாக்கிய தெனலாம் (வளரும்)

# கூட்டுறவு பற்றி இந்தியப் பிரதமர்

கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பாதகமாக இருந்து வந்துள்ள அரசியல் தலையீட்டை அறவே நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற மகாநாடொன்றில் குறிப்பிட்டார்.

இம்மகாநாட்டில் மாநிலக் கூட்டுறவு அமைச்சர்கள் கலந்து கொண்டனர். திரு. மொரார்ஜி தேசாய் மேலும் கூறியதாவது; கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரை அரசாங்கம் வழிகாட்டியாக இருக்க வேண்டுமேயொழிய மேற்பார்வையாளராக இருக்கக் கூடாது. அரசாங்கத்தின் தொடர்புகள் மிக மிகக் குறைந்தனவாக இருக்க வேண்டும். கூட்டுறவு இயக்கத்திற்கெனத் தம்மை அர்ப்பணித்தவர்கள் கூட்டுறவு இயக்கத்தை விருத்தி செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்.

## புதிய நெறியாளர்

தாய்லாந்தின் கூட்டுறவு லீக்கின் நெறியாளராக திரு விச்சியன் சொபேர்ன் நியமிக்கப்பட்டுள்ளார்

இவர் பல ஆண்டுகளாக இந்நிறுவனத்தின் பிரதி நெறியாளராகக் கடமையாற்றினர். அதற்கு முன்னர் அவர் தாய்லாந்து கூட்டுறவுத் திணைக்களத்தில் கடமையாற்றினர்.

## கூட்டுறவுக் கல்லூரி யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரபயிற்சி நெறி (சாதாரணபிரிவு) 1978

3 – 7 – 1978 தொடங்கவிருக்கும் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நெறிக்கு (சாதாரண பிரிவு) கீழே குறிக்கப்பட்டுள்ள தகைமைகளையுடைய கூட்டுறவுப் பணியாளர்களிடமிருந்தும் பணியாளர் அல்லாதோர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

**கூட்டுறவுப் பணியாளர்.**

(1) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் (கனிஷ்ட பிரிவு) பரீட்சையில் சித்தியெய்தியோர்

(2) சிரேஷ்ட கல்வித் தாரதரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்த நிரந்தர பணியாளர்.

(3) ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் 5 வருட அனுபவமும் கனிஷ்ட கல்வித்தராதரப் பரீட்சையில் சித்தியெய்திய நிரந்தர பணியாளர்.

**பணியாளர் அல்லாதோர்.**

சிரேஷ்ட கல்வித்தராதரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியெய்திய அத்தடவையில் அல்லது அத்தடவையிலும் வேறு ஒரு தடவையிலும் எண்கணிதம் அல்லது கணக்குப் பதிவியல் அல்லது தூயகணிதம் அல்லது பிரயோக கணிதம் வர்த்தக எண்கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி அடைந்தவர்கள்.

தகமையுடைய கூட்டுறவுப்பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு வெற்றிடங்கள் இருந்தால் மட்டுமே பணியாளயர்கள் அல்லாதோர் தேர்ந்தெடுக்கப்படுவர்

விண்ணப்பப்படிவங்களை பொறுப்பதிகாரி, கூட்டுறவுக் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்

விண்ணப்பப்படிவங்களைக் கடித மூலம் பெற விரும்புவோர் சொந்த முகவரி எழுதி முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அபைபி வைத்தல் வேணடும்.

கூட்டுறவுப் பணியாளர்களின் விண்ணப்பங்கள் அப்பகுதி கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களின் முடிவு திகதி 23 –6 –1973

சு. சிவசுப்பிரமணியம்
பொறுப்பதிகாரி.

கூட்டுறவுக் கல்லூரி.
யாழ்ப்பாணம்
7 – 6 – 1978

யா. மாநகர ப. நோ. கூ. ச. கிளையாகிய கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் யாழ் மாவட்டக் குழுவினரால் வெளியிடப்பட்டது. 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் .244-78